பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

—: o :—

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 19 } ஜய ஸ்ரீ மாசி மீ 1955 பிப்ரவரி { பகுதி 11

408/2

CONNEMARA PUBLIC LIBRARY 7 - AUG 1956 MADRAS

பொருளடக்கம்

			பக்கம்
1.	பெரியகுளம் தாலூக்கா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு	...	143
2.	கணக்கு: கற்பித்தல்—சூழ்நிலையைப் பயன்படுத்துதல் T. S. ராஜகோபாலன், B.A., L.T.	...	153
3.	மௌன வாசிப்பு—மாதிரிப் பயிற்சிகள் V. நடராஜன்	...	157
4.	செய்தித் திரட்டு	...	164
5.	பத்திராதிபர் குறிப்புக்கள்	...	166

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
„ R. KRISHNAMURTHY
„ K. KURUVILA JACOB
„ T. P. SRINIVASAVARADAN
„ V. NATARAJAN
„ V. ARUNAJATAI
„ L. MARIAPRAGASAM

Sri S. MARIA JOSEPH
„ J. VAIDYANATHAN
„ G. SRINIVASACHARI
„ C. RANGANATHA AIYENGAR, *Secretary*
„ V. B. MURTHI, *Asst. Secretary.*

ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

			அ.	பை
முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	4	0
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	5	0
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	....	6	0
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	7	0
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	7	6

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M ED. திருத்தியமைத்தது

முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	அணு	5
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	,,	6
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	....	,,	10
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	,,	13
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	,,	14

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

பாலர் கல்வி

தொகுதி 19	ஜய ௵ மாசி ௴ 1955 பிப்ரவரி	பகுதி 11

பெரியகுளம் தாலூக்கா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு

இந்த மகாநாடு போடிநாயக்கனூர் சென்ட்ரல் சினிமாக் கட்டிடத்தில் 12-2-1955ல் நடைபெற்றது. தாலூக்காவில் உள்ள எல்லா ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் நூற்றுக்கணக்காக வந்து கூடியிருந்தனர்.

சென்னை இராஜ்ஜிய முதல் அமைச்சர் உயர்திரு. K. காமராஜ் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்து ஆசிரியர்களுக்கு உற்சாகமளித்துப் பேசினார்கள். மகாநாடு தொடங்குமுன் உயர்திரு. T. G. கிருஷ்ணமூர்த்தி M. L. C. அவர்கள் கொடியேற்றி வைத்துப் பேசினார். பிறகு வரவேற்புக் குழுத்தலைவர் திரு. M. S. சுப்பு ராவ் அவர்கள் எல்லாரையும் வரவேற்று உபசாரப் பத்திரம் வாசித்தார். மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் தலைமை உரை நிகழ்த்திய பிறகு பல பிரமுகர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர். பாரத நாட்டுத் தலைவர்கள் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்கள். உயர்திரு. A. S. சுப்பராஜ் M. L. A. அவர்கள், உயர்திரு. M. S. சிங்கராயர் அவர்கள், மதுரை ஜில்லா போர்டு தலைவர், உயர்திரு. R. சோணைமுத்து அவர்கள், போடிநாயக்கனூர் முனிசிபல் சேர்மன், திரு. P. V. வேங்கடவரதன் அவர்கள் மதுரை ஜில்லா கல்வி அதிகாரி முதலிய பிரமுகர்கள் மகாநாட்டில் பிரசன்னமாயிருந்து சிறப்பான சொற்பொழிவுகள் செய்தார்கள்.

உயர்திரு. A. இராமசாமி அவர்கள் ('தமிழ் நாடு' துணை ஆசிரியர்), "ஆசிரியர் அன்றும் இன்றும்" என்ற விஷயத்தைப் பற்றியும், உயர்திரு. P. வீரராகவன் அவர்கள் ("ஆரம்பக் கல்வி" ஆசிரியர்) "புதுக் கல்வித் திட்டம்" என்பதைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள்.

வரவேற்பு உரையின் சுருக்கம்

இந்நகருக்கு உங்களை வரவேற்பதில் பெருமகிழ்வெய்துகிறோம். இது மலைவளப்பொருளாகிய காப்பி, தேயிலை, ஏலம், வாழை இவைகளின் வாணிபத்தால் நிறைசெல்வம் பெற்ற பெருமக்கள் வாழும் ஊர். கலைவளம் நிறைந்து விருந்தோம்பலிற் சிறந்து விளங்கும் ஊர். இச்சிற்றூருக்குத் தங்களை மனமுவந்து வரவேற்கிறோம்.

அரசாங்கப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னும், மனிதன் உள்ள மட்டும் உழைப்பதே உயர்வு என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக்காட்டுவான் போன்று நமது தலைவர் திரு. V. நடராஜன் கல்வி உப-கமிட்டியிலும் இதரக் கமிட்டியிலும் அங்கம் வகித்து கல்விக்காகப் பணியாற்றி வருதலை மிகவும் போற்றி வரவேற்கிறோம்.

கனம் மந்திரியாரோ! பொதுஜன ஆதரவு மிகவும் பெற்றிருப்பவர். மனித இயல்பு நன்கறிந்தவர். சிறந்த நட்புக்குரியவர். தாம் விரும்புவதைச் செய்து முடிக்கவல்ல சமயோஜித சமாளிப்பு ஆற்றல் பெற்றவர். ஆரம்ப ஆசிரியர்பால் அன்பு கொண்டவர். இத்துணை சிறந்த பண்புகள் ஒருங்கே அமையப்பெற்ற திரு. காமராஜரை மனமிக மகிழ்ந்து வரவேற்கிறோம்.

நாம் கோளா முன்னம் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கான "ஆரம்பக் கல்வி ஆராய்வுக் குழுவும்" "தமிழ்நாடு காங்கிரஸ் கல்வித் துணைக் குழுவும்" அமைத்திருப்பது நம்பால் அவருக்குள்ள அன்பு எத்தகையது என்பது வெளிப்படை. இத்தகையர் இன்று துவக்கி வைக்கும் இம்மகாநாட்டின் தீர்மானங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகாமல் அன்னார் சிறந்த முயற்சியால்

ஆசிரிய உலகுக்கோர் புதிய சகாப்தத்தைத் தொடக்கிவைக்குமென நம்பி மனம் குளிர்ந்து வரவேற்போமாக!

பொதுஜனப் பணியேற்று சுயநலத்தை விடுத்து சீரிய செயலாற்றிவரும், ஜில்லா போர்டு தலைவர்கள், சட்டசபை அங்கத்தினர், நகரசபைத் தலைவர்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

சுதந்திரம் பெற்ற சிறிது காலத்திற்குள்ளாகவே இந்தியா பெருஞ்சாதனைகள் சாதித்திருக்கின்றது என்பது உண்மையே ஆயினும் கல்வித் துறையில் இப்பெருமை எங்கே? இனியும் பத்து ஆண்டுகள் தேவை என திட்டமிடப்படுகிறது. நவபாரதத்தை சிருஷ்டிக்கும் பணியில் ஆரம்ப ஆசிரியர் பங்கு அளவு கடந்தது என்பது மிகையாகாது. கிராமவாசிகள் பசி, நோய், வறுமை, அறியாமை ஆகியவற்றிலிருந்து நீங்கிப் புத்துயிர் பெற்றுப் புது வாழ்வு வாழ உதவுபவர் ஆரம்ப ஆசிரியர்களன்றோ? இத்தேச சேவைபுரிய இதோ அவர்கள் சித்தமாயிருக்கின்றனர். அவர்களை ஏற்றுப் பேணி அவர் தம் குறைகளைக் கண்டு, கேட்டு களைந்து கொள்வதுதான் காருண்ய கவர்ன்மெண்டார் கடமையாகும்.

அன்றியும் ஆசிரியர்களின் சிறிய குறைகளையெல்லாம் மிகைப்படுத்தி அவர்களை எங்கும் எப்பொழுதும் யாரும் இழிவுபடப் பேசுவதான நிலையைக் குறித்துக் கண்டிக்காதிருப்பதற்கில்லை. ஆதியில் குருகுலவாசம் செய்து அவருக்குப் பணிவிடையாற்றிப் போற்றி கல்வி பயின்றதுபோய் வித்தையை விற்று விலைகொள்வது போன்ற ஒரு நிலை கல்வித் துறை ஏற்பட்டதே இதன் காரணமாயிற்று போலும். மேலும் ஆசிரியரிடை ஒற்றுமையின்றி பலதரப்பட்ட ஸ்தாபனத்தின்கீழ் பலரக ஊதியம் பெற்று வருவதும் விரும்பத்தகாததொன்றாகும். இக்குறை நீங்கவே "உதவிபெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் யூனியன்" "ஜில்லா போர்டு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் யூனியன்" "முனிசிபல் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் யூனியன்"கள் ஒன்றுசேர இம்மகாநாட்டை நடத்திவைக்க முன்வந்திருக்கின்றன. இந்த ஐக்கியம் பிறைச் சந்திரனைப்போல மேலும் மேலும் வளர்ந்தோங்குவதாகுக!

நாட்டின் புரட்சிகரமான மாறுதல்கள் இதர துறைகளில் இயங்கிவர கல்வித்துறையில் மட்டும் ஏன் இத்துணை தவக்கம் என்பது தெளிவுபடவில்லை. வெறும் அனுதாப உணர்ச்சி மட்டும் நிலைமையை சீர்படுத்தி விடாது என்பது உறுதி. பேச்சுக்கள் செய்கைகளாக காட்டப்படவேண்டும். ஜனத்தொகையைக் கொண்டு கணக்கிட்டால் சுமார் பத்து லக்ஷம் ஆசிரியர்கள் தேவையாகும். அத்துணைக்குப் பணம் எங்கேயிருக்கிறது என்ற ஒரே பல்லவியைப் பாடிக் கழிப்பதில் பயனில்லை. இனியும் அதைப் பொறுக்க முடியாது. நாடு உயர மக்கள் கல்விநிலை உயரவேண்டும். கல்வி அறிவு உயர ஆசிரியர் நிலை சமுதாயத்தில் உயரவேண்டும். இந்நிலையை ஆக்கித் தருவது அரசாங்கத்தாரின் கடமையும் பொதுஜனங்களின் கடமையுமேயாகும்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் யாவரும் ஒரே குலம். அவர் பெறும் ஊதியம் ஒரே நிறை. அவர்களைக் கண்காணிப்பது ஒரே ஸ்தாபனம். அதுவும் அரசாங்கம் என்ற நிலையை உண்டாக்கித்தரவல்ல திறமையுடைய தலைவர் அவர்களுக்கும், தலைமை அமைச்சர் அவர்களுக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும், ஸ்தலஸ்தாபன தலைவர்களுக்கும், இம்மகாநாடு சிறப்புற நடந்தேறப் பொருளுதவியும் மற்ற உதவிகளும் தந்தவர்களுக்கும், பிரதிநிதிகள் தங்க வசதியான தன் வாசஸ்தலங்களைத் தந்துதவிய திரு. A. S. சுப்பராஜு அவர்களுக்கும் முனிசிபல் கமிஷனர் அவர்களுக்கும் இக்கொட்டகையைத் தந்துதவிய திரு. K. M. S. மல்லையன் செட்டியார் அவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றி.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் தமது தலைமை உரையில் கூறிய விஷயங்களாவன :

குடியரசுப் பிரகடனத்தில் ஒவ்வொரு பிரஜையின் உரிமைகள் திட்டமாக உறுதி கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குழந்தையும் வாழ வேண்டும். கல்வி உரிமை அனுபவிக்கவேண்டும். குடியரசு ஸ்தாபிதமான 15 வருஷ காலத்திற்குள் இந்தியப் பிரஜைகள் யாவரும் எழுதப்படிக்கவும் வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் 14 வயது வரை இலவசப் படிப்பு பெற உரிமை உண்டு.

இந்தக் குறிக்கோளைப்பற்றி நினைத்தாலே பயமாக இருக்கிறது. 1951 ஜன கணிதப்படி 36 கோடி மக்களில் 6 கோடி மக்களுக்கும் எழுதப்படிக்கத் தெரியும். சென்னை இராஜ்ஜியத்தில் இன்னும் சுமார்

ஒரு கோடிப் பிள்ளைகளுக்கு—அதாவது கல்வி வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு—கல்வி வசதி தரவேண்டும். குடியரசு ஸ்தாபிதமாகி ஐந்து ஆண்டுகள் ஓடி விட்டன. ஐந்தாண்டுத் திட்டம் பிரமாதமாகப் போடப்பட்டது வாஸ்தவம். 2068 கோடி ரூபாய்கள் செலவு திட்டம் இந்தியா முழுவதற்கும். இதில் கல்விக்காக 150 கோடிதான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாராகிவருகிறது. அதிலாவது கல்விக்காகப் பெரும்பகுதி ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஆரம்பக் கல்வி பிரபலமாக அமைந்து நிலைபெறும் முன்னரே ஹைஸ்கூல், யூனிவர்சிடி இத்தகைய கல்வியைப் பெருக்கத்தொடங்கி விட்டனர் என்று குறை கூறினார்கள். ஆனால் இப்போதும் அக்குறையைப் போக்கியதான அறிகுறிகள் ஒன்றும் காணப்படவில்லை. கல்லூரிப் படிப்பு மோகம் ஓரளவு குறைந்து தொழில் நிபுணக் கல்வியின் அவசியம் வற்புறுத்தப் படுகிறது எனினும் ஆரம்பக் கல்வியை நாடெங்கும் பரப்புவதற்கான உடனடியான அவசர முயற்சிகள் இன்னும் பிரமாதமாகவில்லை. சுதந்தரப் போராட்டத்தின்போது ஒருதலைமுறைப் பிள்ளைகளுக்கு இந்த அரைகுறைக் கல்வி இல்லாமல்போனதால் பெருந்தீங்கு ஏற்படாது. சுதந்தரம் வந்த பிறகு எல்லாம் சரிவரப் போய்விடும் என்று எல்லாம் சமாதானம் சொன்னவர்கள் இப்போது சுதந்தரம் வந்த பிறகு செயல் ஆற்றுவதில் ஏன் தயங்குகிறார்கள்? ஆதாரக் கல்வியே நாடெங்கும் பரவலாக ஏற்படவேண்டும் என்ற கொள்கையை ஏட்டு அளவில் சர்க்கார் ஒப்புக்கொண்டபோதிலும் அதற்கான திட்டங்களை வகுத்து வேண்டிய தொகையை ஒதுக்கி ஆசிரியர்களைப் பயிற்சி செய்து ஆதாரப்பள்ளிகளை எல்லா கிராமங்களிலும் அமைக்க இன்னும் துணிவாக முன்வரக்காணோம். குடியரசு பிரகடன லட்சியப் பிரகாரம் 6—14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் யாவருக்கும் இன்னும் 10வருஷ காலத்திற்குள் இலவசக் கல்வி அளிக்கும் ஆசை எங்ஙனம் பூர்த்தியாகும்?

ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றியே இன்னும் சர்ச்சை நடந்து வருகிறது. சென்னை சர்க்கார் இதைப்பற்றி ஆலோசித்து யோசனை சொல்லுமாறு ஒரு கமிட்டியை நியமித்திருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அந்தக் கமிட்டியார் தயாரித்த வினாத்தாள் எனக்கும் அனுப்பப் பட்டது. தென் இந்திய ஆசிரிய சங்கத்தில் ஒரு சிறிய கமிட்டியில் நானும் அங்கத்தினராகக் கலந்து கொண்டேன், அதைப்பற்றி யோசிக்கப்பட்டது. சென்னை சங்கம் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள இதர ஜில்லா சங்கங்களின் யோசனைகளையும் எதிர்பார்த்திருக்கிறது. இந்த மகாநாட்டில் முக்கியமாக ஆரம்பக் கல்வித் திட்டத்தைப் பற்றி ஆய்ந்தோய்ந்து பரிசிலனை செய்து தீர்மானிப்பீர்கள் என நம்புகிறேன்.

தொடக்கப் பள்ளியின் நோக்கம் யாது என நாம் முதலில் நிச்சயப் படுத்திக் கொள்ளவேண்டும். எண்ணும் எழுத்தும் கற்பிப்பது மாத்திரமல்ல, அல்லது ஏதோ ஜீவனோபாயத்திற்கான தொழிலைக் கற்பிப்பது மாத்திரமல்ல, அல்லது மேல் உயர்தரக் கல்விக்குத் தேவையான ஆரம்பக் கல்வியைப் போதிப்பதும் அல்ல. முக்கியமாக குழந்தையின் சுபாவ இயல்பு சக்தியைப் பெருக்கிப் பரிபூரண அபிவிருத்திக்கு உதவி செய்து அக்குழந்தை வாழும் சூழ்நிலை சமூகத்தையும் உயர்ந்தோங்கும்படி செய்வதேயாகும். இந்த நோக்கத்தைப் பற்றியே நாம் இன்னும் வாதப் பிரதி வாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம். நோக்கத்தைத் திட்டமாக அமைத்துக் கொண்டு எல்லாரும் நிறைவேற்றத் தொடங்கினோமாயின் அபிப்பிராய பேதங்களுக்கு இடமே வராது. இயல்பாக உள்ள சக்தியைப் பயன்படப் பெருக்குவது என்றால் அதுவே ஆதாரக் கல்வியின் அம்சமாகும். ஆதாரக்கல்வி என்றால் ஒரு சிலர் பள்ளிப் பாலகர்கள் நூல் நூற்பதும் பள்ளி அறைகளைப் பெருக்கி மெழுகுவதும் என்று கருதுகிறார்கள். சில சமயம் ஆதாரக் கல்வி அபிமானிகளும் நிபுணர்களும் நூல் நூற்பதுதான் ஆதாரக்கல்வியின் அடிப்படைத் தத்துவம் என்று ஒரே யடியாகச் சாதிப்பது மாத்திரமன்றி வேறு வித அபிப்பிராயங்களைக் கேட்டுப் பரிசிலனை செய்யவும் ஒப்புவதில்லை. சுதந்தரப் போராட்ட காலத்தில் மக்களை ஒற்றுமைப் படுத்தி உத்சாகப்படுத்தி ஊக்குவிக்க அமைந்த அருமையான சக்திச் சின்னமாக அமைந்தது சர்க்கா. மில் துணிகளைக் கொணர்ந்துகொட்டி பிரிட்டிஷார் நமது நாட்டு மக்களை வறுமைப்படுத்தி வாட்டியதற்கு விமோசனம் அளிக்கும் சின்னமாகச்

சர்க்காவும் நூற்புத் தொழிலும் பேருதவி அளித்தது. இப்போது சுதந்தரம் வந்த பிறகு உலகத்தில் உள்ள மற்ற நாடுகளுடன் சமதையாக நம் நாடும் இருக்க வேண்டிய நிலையில் யந்திரத் தொழிற் சாலைகள் பெருக வேண்டியது அவசியம். இதை அனுசரித்தே ஐந்தாண்டுத் திட்ட அபிவிருத்தி ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பலவித தொழில் ஆராய்ச்சி சாலைகளும் தொழில் நுட்ப முறைகளும் நம் நாட்டில் முன்னேற்றமாகி வருகின்றன. விஞ்ஞானம் பெருகுவதுபற்றி பிரதம மந்திரி நேருஜி அரும்பாடுபட்டு வருகிறார். மகாத்மா காந்திஜி இப்போது ஜீவவந்தராயிருப்பாராயின் அவரும் இப்போது உள்ள நிலையில் நமது நாட்டுச் சிறுவர்கள் வெறும் நூற்புத்தொழிலிலேயே மாத்திரம் பயிற்சி பெறுவது போதாது என்று சொல்வார் என்பது திண்ணம். இந்த அபிப்பிராயத்தையே முன் ஒரு சமயம் ராஜாஜி அவர்களும் சொன்னார்.

ஆதாரக் கல்வி என்பது நூற்பதுதான் என்று குறுகிய கருத்துக் கொள்ளாமல், வாழ்விற்கு ஆதாரமான பலவகையில் சிறுவர்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதே ஆகும். அதுவே பரந்த நோக்கம். சுக வாழ்விற்கு அடிப்படையான உடல் உழைப்பும் சுபாவ இயல்பு சக்திகளைப் பயன்படுத்தி வாழ்க்கைச் சூழ் நிலையில் தானும் சமூகத்தாரும் சந்தோஷமாக வாழ்வதற்கு உதவும்படியாகக் கல்வியை அமைப்பதுதான் ஆதாரக்கல்வி என்பது விளங்கும். இவ்விதம் பரந்ததொரு விசாலமான இலட்சியத்தை மறுத்து நூல் நூற்பதும் நெசவு நடத்துவதும்தான் ஆதாரக்கல்வியின் இலட்சியம் என ஒரு சிலர் வாதம் செய்வதையும் காண்கிறோம். இவர்களுக்கு எதிராக வேறு சிலர் அணுகுண்டு யுகத்தில் ஆதாரக் கல்வியைக்கொண்டு என்ன பிரயோசனம், துப்பாக்கிமுன் துளசிதளம் எறிந்த மகா வீரர்கள்போல நம் நாட்டு மக்கள் ஆகலாம் என்று எதிர்வாதம் செய்கின்றனர்.

முன்னே குறிப்பிட்ட நோக்கத்தையடுத்து ஆதாரக்கல்வி என்றால் குழந்தையின் பூரண வளர்ச்சிக்கு உதவியாக உள்ள எல்லா இயல்பு சக்திகளையும் பயன்படுத்துவது என்பதுதான். இதில் பதார்த்த அறிவு, உடல் உழைப்பு, சமூக வாழ்க்கை எல்லாம் கலந்துள்ளது. ஒன்றை யொதுக்கி ஒன்றை மாத்திரம் பிரதானப்படுத்துவது அல்ல.

கல்வித் திட்டத்தில் இதுகாறும் புத்தகப் படிப்பை முக்கியமாகக் கருதி வந்தது அக்காலம். ஆனால் இப்போது வாழ்க்கையுடன் கலந்த கல்வி வேண்டும் என்று எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். அதற்கேற்ப நமது திட்டமும் காலமும் வகுப்பது அவசியம். இந்த ஆதாரக் கல்வியும் எட்டு வருஷத் திட்டமாயிருந்தால்தான் 14 வயது முடிக்கும் சிறுவர் சிறுமிகள் ஒரு பூரண நிறைவு பெற்ற நிலையைப் பெற முடியும். எட்டு வருஷ ஆரம்பக் கல்வியை அமைத்து அதற்கான பள்ளிகளை நிறுவ வேண்டுமென்றே இம்மகாநாட்டில் வற்புறுத்துகிறோம். புதுப்பள்ளிகள் நிறுவும் வேலையில் தொல்லைகள் மிகவும் உண்டு. இப்போது உள்ள பள்ளிகளையெல்லாம் மூடிவிட்டு உடனே மறுநாள் புதுப் பள்ளிகளை ஏற்படுத்துவது சாத்தியமல்ல. இருக்கும் பள்ளிகளைச் சீர்ப்படுத்தி எட்டு வருஷப் பள்ளிகளாக்க வேண்டும். புதுப்பள்ளிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளை நிர்வகித்து நடத்தும் பொறுப்பு அரசியலாருடையது. அந்நிய ஆட்சி காலத்தில் ஏதோ தயவு தர்மம் செய்வதுபோலக் கல்விச் சாலைகள் நிறுவுவது எனக் கருதியிருக்கலாம். ஆனால் குடிகளின் க்ஷேம நலத்தையே குறிக்கோளாகக் கொண்ட சுதந்தரக் குடியரசு நாட்டில் மக்கள் கல்விக்கு உதவுவது முதல் கடமையென்று சுதந்தரப் பிரகடனத்திலேயே குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆரம்பக்கல்வித் திட்டம் நிறைவு பெற்று வெற்றியாக முடிவதற்கேற்ற சூழ்நிலையை அமைப்பது முக்கியம். இதில் இப்போது உள்ள கஷ்டங்களை கவனிப்போம். ஆரம்பக் கல்விச்சாலை நிர்வகித்து நடத்துவோர் பலதரப்பட்ட மானேஜ்மெண்டுகள். அதே வயதுப் பிள்ளைகளில் ஒரு சாரார் ஆரம்பப் பள்ளிகளிலும் மற்றொரு சாரார் செகண்டரிப் பள்ளிகளிலும் பயில்கின்றனர். செகண்டரிப் பள்ளியின் ஆதார அடிப்படை அம்சமாகவே ஆரம்பப்பள்ளித் திட்டம் அமைக்க வேண்டுமென சிலர் வாதம். பூர்த்தியானதொரு ஆரம்ப கட்டம் எட்டு வருஷப் பயிற்சியுடன் முடிவடைகிறது என்ற கருத்தே இன்னும் பொது ஜனங்களுக்கு, ஏன் கல்வித்தொண்டு செய்யும் ஆசிரியர்களுக்கே, உறுதியாக ஏற்படவில்லை. ஆரம்பக் கல்வி என்று இந்த கட்டத்திற்குப் பெயர் கொடுப்பதே இவ்வித நிலைக்குக் காரணம் எனலாம். ஆரம்பம் என்று சொல்

லும்போது ஏதோ முடிவு பெறவில்லை. பூர்த்தியாவதற்கு இன்னும் ஒரு நிலை உண்டு என்றே கருதவேண்டிவருகிறது. இது முதல் படிக் கல்வித்திட்டம் என்றே கொள்ள வேண்டும். முதல் படி, இரண்டாம் படி, மூன்றும் படி எனப் பெயரிடுவது நல்லது.

கல்விக்குரிய வயதுப் பிள்ளைகள் எல்லாரும் எட்டு வருஷப் படிப்புத் திட்டத்தில் முடிவு பெற்று பூர்த்தி செய்வது முதல் படி. இரண்டாம் படியின், அதாவது செகண்டரிப் பள்ளியின், முதல் மூன்று வருஷ காலம் மிடில் ஸ்கூல் நிலை என்று சொல்லப்படும். இந்தப் பகுதியும் எலிமெண்டரி கல்வியின் இறுதிப் பகுதியான கடை மூன்று வருஷமும் ஒன்றுக்கொன்று உராய்ந்து ஒருவகைப் போட்டியான சூழ்ச்சியில் அமைந்துள்ளது. இந்தப் போட்டி நிலை போகவேண்டும். ஹையர் எலிமெண்டரிப் பகுதி என்று ஒருசிலப் பள்ளிகளே நடத்துகின்றன. இந்த நிலையிலிருந்து மிடில் ஸ்கூல் பகுதிக்கு அடிக்கடி போக்குவரவு ஏற்பட்டுக் குழப்பம் உண்டாகிறது. இதைத் தவிர்க்கவே எல்லா எலிமெண்டரிப் பள்ளிகளும் எட்டு வருஷப் படிப்பு பூர்த்தி செய்யும் நிலையங்களாக இருப்பது அவசியம். அங்ஙனம் ஏற்பட்டுவிடுமாயின் செகண்டரிப் பள்ளி காலம் மூன்று, அல்லது இப்போது யோசனையிலிருந்துவரும் பிரகாரம் நான்கு, வருஷங்களாக அமைத்துக்கொள்ளக்கூடும். அந்த கட்டத்திற்கான திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். ஆகவே பூர்த்தியுள்ள எட்டு வருஷ கட்டத்தையே எலிமெண்டரிக் கல்வியென நாம் வற்புறுத்துகிறோம்.

எலிமெண்டரிப் பள்ளிகளை நிர்வகிக்கும் பொறுப்பை சிறுகச் சிறுக அரசியலாரே ஏற்றுக்கொள்வது அவசியம். அந்நிய ஆட்சி காலத்தில் ஏதோ நாங்களும் கல்வி தர்மம் செய்கிறோம் என்ற பெயர் அடையும் நோக்கத்துடன் திரவிய சகாயம் செய்கிறோம், யாராவது பள்ளிகளை ஏற்படுத்தி நடத்துங்கள் என்று மேற்கொண்ட முறை அறைகுறை ஏற்பாடுதான். ஏதோ பண உதவி செய்கிறோம். அந்தப் பணத்தைச் சரிவரச் செலவு செய்து நடத்துகிறீர்களா என்று பரீட்சை நடத்தி மேம்பார்வை செய்யும் உத்தியோகஸ்தர்களை நியமித்து குற்றம் குறை கூறிக்கொண்டு வருஷத் தணிக்கையில் ரிபோர்ட்டுகள் எழுதிக் கொண்டு காலந்தள்ளுவது மக்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு உள்ள நிலையாகாது.

தணிக்கை செய்து குறைபாடுகள் கூறிக் கொண்டு காலம் தள்ளுவது சாம்ராஜ்யக் கொள்கையில் ஊறிய அரசியலாரது மனோபாவம். மக்களது க்ஷேம நலத்தைக் கோரும் மக்கள் ஆட்சியில் நடத்துவது யார், குற்றம் கூறுவது யார்? எல்லாம் ஆட்சி செய்யும் சர்க்கார்தானே. ஆகவே போர்டு பள்ளிகள், உதவிபெறும் பள்ளிகள் என்ற பலதரப்பட்ட வித்தியாச ஸ்தாபனங்கள் இல்லாமல் எல்லாப் பள்ளிகளையும் அரசியலாரே நடத்துவது அவசியம். ஏதோ அந்நியர்கள் நடத்தும் காரியத்தைச் சோதனை செய்து குற்றங்காணும் நிலையை விட்டுவிட்டு அரசியலார் தாமே நடத்தும் காரியமாக மேற்கொள்வதுதான் குடியரசில் உள்ள பெருமை.

முதல்படிக் கல்வி ஸ்தாபனங்கள் பலதரப்பட்ட நிர்வாகஸ்தர்களிடம் இருப்பதால் ஆசிரியர் பாடு கஷ்டமாகிவிடுகிறது. சம்பள ஏற்றத்தாழ்வு, அடிக்கடி வேலை மாற்றம், லீவு வசதிகளில் குறைவுகள் முதலிய பல தொல்லைகள் ஏற்படுகின்றன. வாழ்க்கை வசதிகள் கஷ்டமாயிருக்கும்போது ஆசிரியர்கள் தமது தொழில் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்துவது எங்ஙனம் சாத்தியப்படும்? போதனாமுறைகளைச் சீர்ப்படுத்துவதற்கும் புதிய புதிய வழிகளைக் கையாண்டு பலாபலன்களை விளக்கும் அனுபவம் பெறுவதற்கும் வசதி ஏது? மனோ நிம்மதி ஏது? இதர நாடுகளில் பாருங்கள், ஆசிரியர்கள் எவ்வளவு உற்சாகமாகப் புது முறைகளைப் பெருமையுடன் தினப்படி அனுபவத்தில் கையாளுகிறார்கள் என்று சொல்லி நமது சகோதர ஆசிரியர்களைக் குறை கூறுவதில் மாத்திரம் பயன் காண முடியுமா? ஆசிரியர்கள் உத்சாகமாக உழைப்பதற்கான சூழ்நிலையை அமைப்பது மக்களின் கடமை. இதை மறந்துவிட்டு ஆசிரியரையும் அவர் செய்யும் தொழிலில் உள்ள குறைபாடுகளையும் மாத்திரம் வெகு சுலபமாகச் சொல்ல முன்வந்து விடுகிறார்கள்.

குழந்தைகளை நோய் நொடியின்றி வளர்த்துக் காப்பாற்றுவது போலவே கல்வி அளித்து உதவுவது பெற்றோர் கடமை என்ற பொதுஜன அபிப்பிராயம் பரவலாக அமைந்து விட்டதா? வளரும் குழந்தைகளுக்குப் போதிய உணவு அளிப்பதே கஷ்டமாக இருக்க அவர்களுக்குக் கல்வி தர ஏற்பாடு செய்வது இன்னும் அதிகக் கஷ்டம். பொது ஜனங்களுக்குக்

கல்வி முன்னேற்றத்தில் சிரத்தை இல்லை யெனச் சுலபமாகச் சொல்வது எளிது. கட்டாயக் கல்வி அமல் செய்ய வேண்டும் என்று சட்டம் இயற்றுவதும் சுலபம். கட்டாயக் கல்விச் சட்டம் ஏட்டில் இருக்கும்படி திட்டமிடுவதும் சுலபம். ஆனால் அதைப் பொதுஜன வாழ்க்கையில் அனுஷ்டிப்பதுதான் கஷ்டம். பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்குக் கல்வி வேண்டாமென்று சொல்கிறார்கள்? இல்லை. ஆனால் முதல் தேவை வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு, உடை, வீடு. இவைகளே. கட்டாயக் கல்விச் சட்டம் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டு விட்டது. ஆனால் இவ்வளவு காலமாகியும் வெற்றிகாண முடியவில்லை. ஏதோ ஆண்டு தோறும் அறிக்கைகள் மாத்திரம் அச்சாகி வருகின்றன. கட்டாயமென்றாலே அதில் ஏதோ குறைபாடுதான். விருப்பமில்லாததை கட்டாயப்படுத்திச் செய்ய முயலும் பெற்றோர்களுக்கு இது விளங்குமல்லவா? பொது ஜனங்களுக்கு விருப்பம் இருந்தால் கட்டாயம் செய்யவேண்டியதில்லையே. நாட்டுச் சட்டங்களில் கட்டாயக் கல்விச் சட்டம் கூட உள்ளது என்று பெருமை கொள்வது அந்தக்காலத்து அரசியலாரின் ஆசையாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. உணவு, உடை, வீடு முதலிய வாழ்க்கை அடிப்படை வசதிகளைப் பெருக்கி வரும் மக்கள் சர்க்கார் இலவசக் கல்விக்கான வசதிகளை அதிகப்படுத்தி ஆசிரியத் தொழிலை ஒற்றுமைப்படுத்தி சம்பள முறைகளை சௌகரியமாக்கி விட்டால், கட்டாயக் கல்விக்கு அவசியமே இல்லாமல் போகும். கல்வி பரவலாகி எல்லாப் பிள்ளைகளும் கல்வி பெறுவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை.

கல்வி அவசியமென்று ஜனங்கள் கருதவில்லையா? நமது மக்கள் பண்பாட்டில் கல்வியின் முக்கியத்துவம், ஆசானின் அருமை பெருமை எல்லாம் இயல்பாக ஊறியுள்ளன. ஆனால் அந்த விருப்பத்தைவிட அதிகமாக வாழ்க்கையில் முட்டிக்கொண்டுள்ள பிரச்சினைகள் வேறு. சுமார் 30 ஆண்டுகளுக்குமுன் ஒரு மகாநாட்டில் பேச வேண்டிவந்தது. அச்சமயம் ஆசிரியர்கள் தொழில் நிறுத்தம் செய்யும் பேச்சு—வந்ததுதான் தாமதம்—தலைமை தாங்கிய ஜில்லா கல்வி அதிகாரி தாக்கீது விடுத்தார்—அதைப்பற்றிப் பேசவேண்டாம் என்றார். ஆனால் நான் சொல்வது வேறு. தொழில் நிறுத்தம் செய்வதால் ஏதோ பிரமாதமாக ஆசிரியர்கள் சாதித்துவிடலாம் என்று கனவு காணவேண்டாம். தெருக் கூட்டும் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்தால் ஜனங்களிடையே பரபரப்பு உண்டாகும். அரிசிக்கடை மூடிவிட்டால் ஆத்திரம் பிறக்கும். குடிநீர் வசதிகள் வற்றிவிட்டால் கொதிப்பு காணலாம். ஆனால் பள்ளிச் சாலைகளை மூடிவிட்டால் பொது ஜனங்களுக்கு ஒருவிதப் பரபரப்பும் உண்டாகாது. பரபரப்பு ஏற்பட்டுப் பரிதவிப்போர் ஆசிரியர்களே யல்லாது வேறு யாருமில்லை. இதை நன்கு உணர்ந்திருப்பதால் ஆசிரியர்கள் ஒருபோதும் வேலை நிறுத்தம் செய்வதில்லை. ஆனால் தங்கள் அவக்கேடான இந்த நிலையை ஆசிரியர்கள் மனக்கசப்புடன் அனுபவித்துக்கொண்டே தொண்டு செய்கிறார்கள். அவர்கள் மனக் கசப்பு நீங்கி மகிழ்ச்சியுடன் உழைக்க உதவி செய்வது மக்கள் பொறுப்பு. ஆட்சியாளரின் அடிப்படையான கடமை.

ஆசிரியத் தொழிலில் சிறப்பும் வெற்றியும் காண அவர்களுக்கு மனோநிம்மதி வேண்டும். வாழ்க்கை வசதிகள் அளிக்க வேண்டும். இவைகளைப்பற்றி எல்லாம் இம்மகாநாட்டில் தீர்மானங்கள் செய்யப்படும் என நம்புகிறேன். தமிழ் நாட்டு காங்கிரஸ் கமிட்டியார் ஏற்படுத்திய கல்வி ஆலோசனைக் கமிட்டியில் செய்த சில யோசனைகளை இவ்விடம் கூற விரும்புகிறேன். சம்பளம், லீவு சலுகைகள் முதலிய பல வசதிகளையும் எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி ஒற்றுமைப்படுத்துவது என்ற பல சிபார்சுகளில் முக்கியமாக ஒரு யோசனையையாவது முதல் முதலாக அரசியலார் ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்த இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன். ஆசிரியர்கள் மட்டுமல்ல எல்லாருடைய அன்பையும் கவர்ந்த நமது முதல் அமைச்சர் இருக்கும்போது ஆசிரியர்களுக்கு ஒருவித கவலையும் இல்லை என்ற தைரியத்தில் கூறுகிறேன். பிராவிடண்டு நிதி பென்ஷன் இன்ஷியூரன்ஸ் திட்டத்தை முதன்முதலாகப் பரிசீலனை செய்து தக்கதொரு வழியை நிறுவித் தர வேண்டும். இதர தொழிலாளருக்கு எல்லாம் இவ்வித வசதிகள் செய்ய முன்வந்துள்ள அரசியலார் இந்த வசதியை ஆசிரியர்களுக்கு மட்டும் அளிக்கத் தாமதப்படுவானேன்? ஆசிரியர்கள் இதர தொழிலாளருக்குச் சமதையா என்று ஒரு சிலர்

வாதம் செய்கிறார்கள். தொழில் சங்கம் போல ஆசிரியர் சங்கமும் ஏற்படக்கூடாது என்று ஒரு சாரார் தத்துவம் பேசுகிறார்கள். அவையெல்லாம் கொள்கை அடிப்படையில் தர்க்கம் செய்யக்கூடிய பேச்சு விவாதங்கள். ஆனால் ஆசிரியர்களும் மனிதர்கள்தான். ஆசாபாசங்களால் பாதிக்கப்படும் உயிரினங்கள்தான். வாழ்க்கை வசதிகளை நாடும் ஜீவன்கள்தான். அவர்களுக்கும் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். இதை ஒருவரும் மறுக்கமாட்டார்கள். தொழிலாளர் என்ற அடிப்படையில் ஆசிரியர்களுக்கும் வசதிகள் செய்வதால் ஆசிரியத் தொழிலின் உயர்ந்த தத்துவம் மங்கிவிடாது. ஆகவே அரசியலாரே இந்த இன்ஷியூரன்ஸ் திட்டத்தை ஏற்று நடத்தட்டும். லட்சக்கணக்கான ஆசிரியர் இன்ஷியூரன்ஸ் செய்துகொள்வதால் சர்க்காரிடம் பிரதி வருஷமும் லட்சக் கணக்கான ரூபாய் செலாவணியில் புழங்க வசதி ஏற்படும். வருஷா வருஷம் இத்தொகை அதிகப்படும். ஆசிரியர் பகுதியில் மரண விகிதம் அதிகமில்லை என்று கணக்கு நிபுணர்கள் சொல்கிறார்கள். வருஷ சராசரி 15 சதவிகிதத்திற்கு குறைவு. திடீர் மரணத்தால் வருஷப் பட்டுவாடா அதிகம் ஏற்படப் போவதில்லை. அரசியலார் தாமே நேரில் தம் பொறுப்பில் ஏற்கத் தயங்கினால் சில சிறந்த இன்ஷியூரன்ஸ் ஸ்தாபனங்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்புவிக்கலாம். முக்கியமாக தென் இந்திய ஆசிரிய சங்கத்தார் நடத்திவரும் இன்ஷியூரன்ஸ் ஸ்தாபனத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். 27 ஆண்டுகளாக இந்த ஸ்தாபனம் ஆசிரியருக்குச் சேவை செய்து வருகிறது. இந்த சேவையைப் பலப்படுத்தி எல்லா ஆசிரியர்களும் இன்ஷ்யூர் செய்துகொள்ள அயசியலார் திட்டம் வகுக்கலாம்.

இம்மாதிரியான இன்னும் பல க்ஷேம நலத்திட்டங்கள் இம்மகாநாட்டில் பரிசீலனை செய்யப்படும்.

குடியரசு திட்டத்தில் கூறியுள்ள கல்வி வசதியை அமைக்க ஆசிரியர்கள் மட்டும் பாடுபட்டால் போதாது. அரசியலார் முயற்சியும் அவசியம். எட்டு வருஷ திட்டமாகிய முதல்படிக் கல்விப் பொறுப்பை அரசியலாரே ஏற்று நடத்தினால் பலவித பிரச்சினைகளுக்கு இடமே இராது. பல பள்ளிகளுக்கு இடம், கட்டிடம் முஸ்தீப்பு சாதனங்கள், ஆசிரியர்கள் எல்லாம் தேடித் தருவது சுலபமாய் விடும். ஒவ்வொரு கிராமத்திலும் பொது நிலத்தில் ஒரு பகுதியைப் பள்ளிக்குத் தரலாம். மக்கள் உதவியுடன் கட்டிட வசதி செய்யலாம். மேஜை, நாற்காலி, டெஸ்கு முதலிய முஸ்தீப்புகளை உடனடியாக அமைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த விதிகளைத் தளர்த்தி சிறுகச் சிறுக சௌகரியங்களைப் பெருக்கலாம். இப்போது உள்ள நிலையில் சர்க்கார் உதவி பெற்று மக்கள் நடத்துவதால், குற்றம் கண்டுபிடிக்கும் மேல் அதிகாரிகளாகச் சர்க்கார் இருக்கிறார்கள். குடியரசுக் கொள்கை அமைந்த பிறகு இந்த மனோபாவம் மாறவேண்டும். மக்கள் உதவி பெற்று சர்க்காரே நடத்துகிறார்கள் என்ற மாறுதல் அவசியம். குற்றம் குறை கூறும் மேல் அதிகாரிகளாக இராமல் சர்க்கார் தாமே நடத்துகிறார்கள். குற்றம் குறை பார்த்துச் சீர்திருத்த யோசனை சொல்வோர் பொதுமக்கள் ஆவர். இது தலைகீழ்ப்பாடமன்று. இதுவே இயல்பானது. மக்கள் ஆட்சியில் இதுவே முறையல்லவா?

எதிர்பார்த்த அளவில் கல்வி அபிவிருத்தி ஏற்படாமல் ஏமாற்றம் காண்பதற்கு முக்கிய காரணம் என்ன? கல்வித் தொண்டு ஆற்றும் ஆசையுடன் முன்வரும் பொது மக்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் அரசியலார் நன்றியுடன் ஆதரவு தருவது ஒருபுறம் இருக்கட்டும். ஏனெனில், அரசியலாருக்கு உள்ள ஒரு கடமைப் பொறுப்பை மக்களே செய்யும்போது அவர்கள் நன்றியுடன் பாராட்டி உதவவேண்டியதுதான். ஆனால் அந்நிய ஆட்சி காலத்தில் அமலில் இருந்த சட்ட விதிகளும் கோட்பாடுகளும் போகவில்லை. அவைகள் மாற்றி அமைக்கப்படுவதுடன் அதிகாரிகள் மனோபாவமும் மாறுதல் ஆகவேண்டியது முதல் அவசியம். ஏனெனில் அரசியலார் ஏற்று நடத்த வேண்டிய கடமையில் மக்கள் உதவிசெய்ய வேண்டியிருக்க, மக்கள் தாமாகவே செய்ய முன்வரும் வேளையில் பலவித தடங்கல்களும் இடைஞ்சல்களும் தரும் வகையில் விதிகளும் விதிகளைக் கையாளும் முறைகளும் இன்னமும் இருந்தால் கல்வி முன்னேற்றம் எங்ஙனம் காணமுடியும்? தான் நடத்தாமல் பிறர் நடத்தும்போது சொட்டை சொல்வது மிகவும் எளிதுதான். அந்நிய ஆட்சி அதிகாரிகள் இவ்விதம் சொல்வது சகஜமெனக் கருதலாம். ஆனால் நமது நாடு ஆட்சி நம்மிடமே வந்தபிறகு நம்மிலேயே ஒருவரை ஒருவர் குறைகூறிக்

கொண்டு காலம் போக்குவதில் என்ன பலன்? அதை விடுத்துக் கல்வி முன்னேற்றத்திற்குத் தாராளமாக வேண்டிய அளவு சலுகைகளும் சௌகரியங்களும் ஏற்பட வேண்டும்.

இச்சமயம் மிகவும் நெருக்கடியான அவசர நிலைமை. இன்னும் 10 ஆண்டுகளில் கல்வி வயது உள்ள குழந்தைகள் எல்லாருக்கும் இலவசக் கல்வி அளிக்கவேண்டுமாயின், அந்த நோக்கத்திற்கு இடையூறுகளாயுள்ள பல் விதிகளையும் கோட்பாடுகளையும் மறந்து ஒதுக்கிவிட்டுப் புது அவசர விதிகளைக் கையாளவேண்டும். எப்படியாவது அதிகப் பள்ளிகள் ஏற்படவேண்டும், எல்லாப் பிள்ளைகளும் பள்ளிக்கு வரவேண்டும், போதுமான ஆசிரியத் தொண்டர்களைக் கூட்டவேண்டும் என்பதே முக்கியமெனக் கொள்ளவேண்டும். மகா உன்னதமான உயர்ந்த இலட்சியங்களில் இம்மியளவுகூடக் குறையாமல் இருந்தால்தான் பள்ளிச்சாலை நடத்தலாம், ஆசிரியத் தொழிலில் தொண்டு செய்யலாம் என்று கடுமையான நுட்பக் கோட்பாடுகளைச் சர்க்கார் வற்புறுத்துவதில் பயன் காண முடியாது. விதிகளைத் தளர்த்தி மாற்ற வேண்டுமானால் இஷ்டம்போல் உதாரித்தனமாக இருக்கவேண்டும் என்று அல்ல. கட்டுப்பாடுகள் இன்றிக் காரியம் நடத்த முடியாது. கட்டுப்பாடுகள் அவசியம். அவைகள் இருக்கவேண்டும். ஆனால் அவைகளைக் கையாளுவதில் காலதேச வர்த்தமானம், சமய சந்தர்ப்பம், இடம் பொருள் ஏவல் என்று எல்லாம் வர்ணிக்கிறார்களே அவைகளைக் கவனித்து அனுசரிப்பதே அவசியம்: காரியம் பெரிதேயன்றி வீரியம் பெரிதல்ல என்ற மனோபாவம் தான் முக்கியம்.

அதிகப் பள்ளிகள் அமைக்கும்போது அவைகளுக்குத் தேவையான அதிக ஆசிரியர்கள் வேண்டுமே. இந்தப் பிரச்சினையை சமாளிக்க நல்லதொரு வழியை இன்னும் காணமுடியவில்லை. இப்போது உள்ள 5 ஆண்டுப் பள்ளிகளை எட்டு ஆண்டுப் பள்ளிகளாக உயர்த்துவதும், புதிய பள்ளிகளை ஏற்படுத்துவதும் ஆகிய வேலையை மேற்கொள்ளும்போது பல ஆசிரியர்களைப் பயிற்சி செய்ய வேண்டாமா? இப்போது உள்ள B. T. பயிற்சியும் செகண்டரிப் பயிற்சியும் அளிக்கும் நிலையங்களால் இந்தத் தேவையை சமாளிக்கமுடியுமா? சில ஆண்டுகளுக்குமுன், அந்நாளில் கல்வி மந்திரியாக இருந்தவரிடம் ஒரு யோசனை கூறினேன். அதாவது, ஆசிரியத் தொழிலில் அனுபவப்பட்ட மூப்பர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்புவிக்கலாம். பத்து வருஷ காலமாவது ஆசிரியத் தொழிலில் அனுபவமும் சிறப்பும் பெற்றுள்ள ஹைஸ்கூல் ஆசிரிரியர்கள் தம்மிடம் படித்த மாணவர்களில் ஆசிரியத் தொழிலில் ஆர்வம் கொண்டவர்களை அப்பெரெண்டிஸ்கள், அதாவது தொழில் கற்றுக்கொள்பவர், ஆகப் பொறுக்கி அமர்த்திக் கொண்டு பயிற்சி தரவேண்டும். செகண்டரிக்கல்வி முடித்தவர்களும் B. A. அல்லது B. Sc. முடித்தவர்களும் இவ்வித அப்பெரிண்டிஸ்களாக உழைக்கலாம். அப்பெரிண்டிஸ் ஆசிரியர்களுக்கு இப்போது உள்ள அன்டிரெய்ன்டு ஆசிரியர் சம்பளம் கிடைக்க வேண்டும். ஒவ்வொரு சீனியர் ஆசிரியரும் இரண்டு அப்பெரிண்டிசுகளைப் பயிற்சி செய்யலாம். இரண்டு வருஷகாலப் பயிற்சியில் செய்த practical recordகளையும் ரிபோர்ட்டுகளையும் மூவர் கொண்ட நிபுணர் கமிட்டி பரிசீலித்த பிறகு மதிப்பிட்டு, அவசியமாயின் நேரில் பாடம் நடத்தச் சொல்லிப் பார்த்து, ஆசிரியர் சர்டிபிகேட் தரலாம். T. S. L. C. பரீட்சைக்கும் B. T. பரீட்சைக்கும் இவர்கள் ஆஜர் ஆகித் தேர்வு பெறலாம். மறுபடியும் பயிற்சிப் பள்ளியில் சேரவேண்டுமென்பதில்லை. இந்தத் திட்டத்தை அமலில் கொண்டுவந்தால் அநேக ஹைஸ்கூல்கள் ஆசிரியப் பயிற்சி நிலயங்களாகிவிடும். இராஜ்ஜியத்தில் உள்ள ஹைஸ்கூல்களில் இடம் பொருள் முஸ்தீப்பு வசதிகள் சிறப்பாகப் பெற்றுள்ள இருபது அல்லது முப்பது பள்ளிகளுக்கு இவ்விதப் பொறுப்பை ஒப்படைத்து, ஆண்டுதோறும் ஆசிரியர்கள் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய முடியும். இந்த யோசனையை அவர் பாராட்டிய போதிலும் அமலுக்கு நடைமுறையில் கொண்டுவரவில்லை. இதையே ஓரளவில் அனுசரித்து ஹைஸ்கூல்களில் ஆசிரியப் பயிற்சிப் பகுதி இஷ்டப்பாடமாக நிறுவப்பட்டது. ஆனால் இந்தப்பகுதியை அதிகமான பள்ளிகளில் மேற்கொள்ளவில்லை.

ஆசிரியரிடமே ஆசிரியத் தொழிலுக்கான பயிற்சிதரும் பொறுப்பை ஒப்படைப்பதால் ஆசிரியர் அந்தஸ்தும் லட்சியமும் வெகுவாக உயர்ந்துவிடும். தன்னிடம் பயிலும் அப்பெரிண்டிஸ்களுக்காகவேனும் ஆசிரியர்கள் தற்கால நவீன முறைகளையும் புதுப்புது கருத்துக்களையும் தெரிந்து

கொண்டு முன்னணியில் வருவர். பள்ளி ஆசிரியர் என்றால் ஏதோ கர்நாடக அப்பாவி என்ற பொதுஜன மனோபாவம் மறைந்துவிடும். இவ்விதமானதொரு திட்டத்தை அரசியலார் கவனிக்கவேண்டுமென நான் யோசனை சொல்கிறேன்.

எட்டு வருஷப்பள்ளி, அதுவும் பரந்த அளவான ஆதாரக் கல்வி நோக்கம் உள்ள வகையில், திட்டம் அமைக்கும்போது ஒவ்வொரு கிராமத்திலும் சமூக நலத்துக்காக நிலம் ஒதுக்கிக் கொடுப்பது போலவே கோயில், குளம், சாவடி, சந்தை என்பது போல பள்ளிக்கூடத்திற்கு நிலமும் நில மானியமும் வேண்டும்.

எட்டு வருஷப் படிப்பிற்குப் பிறகு அந்தந்த வட்டாரப் பகுதியில் முழுவு பரிட்சை நடத்தலாம். இப்போது உள்ள இராஜ்ஜிய முழுவதும் ஒரேயடியாக நடைபெறும் பரிட்சைக்குப் பதிலாக அந்தந்த வட்டாரக் கல்விச் சபையே இப்பரிட்சையை நடத்திக்கொள்ளவேண்டும். எட்டு வருஷப் படிப்பு பூர்த்தியான ஒரு கட்டம் இவ்விதம் முடிந்தது. ஹைஸ்கூல் செல்லும் வசதியும் சௌகரியமும் உள்ள பிள்ளைகள் ஹைஸ்கூல் சேர்ந்து மேலும் அடுத்த படிப்புப் பெறலாம். அதற்கு இயலாதவர்கள் தொழில் முறைகளில் பயிற்சி பெறவோ அப்பெரிண்டிஸ் அனுபவம் பெறுவதற்கோ நேரடியாகத் தொழில் துறையில் உழைக்கவோ செல்லலாம்.

எட்டு வருஷப் படிப்பு முடிந்த பிறகு மக்கள் காலக்கிரமத்தில் படித்ததை மறந்துவிடுவார்கள் என்று சொல்வதற்கிடமில்லை. ஏதோ இரண்டு மூன்று ஆண்டு படித்துவிட்டவர்களே எழுத்து அறிவை மறந்து விடுகிறார்கள். ஐந்து ஆண்டு படித்தவர்கள்கூட மறந்து விடலாம். ஏனெனில் நமது கிராமங்களில் புத்தகாலயங்களும் செய்தித்தாள்களும் பெருகவில்லை. தாய்பாஷையான தமிழில் இன்னும் பலப்பல புத்தகங்கள் வெளிவர வேண்டும். புதிய விஞ்ஞான கண்டுபிடித்தங்களையும், உலக வியவகாரங்களையும் விளக்கும் நூல்கள் தேவை. குறைந்த விலை வைத்தால் தான் வீட்டுக்கு வீடு வாங்குவார்கள் என்ற ஆசையில் மட்டக் காகிதத்தில் சீக்கிரம் சேதமாகக்கூடிய விதம் தைத்துப் பிரசுரம் செய்கிறார்கள். புத்தகாலயத்திற்கென சிறந்த பதிப்புக்களை பிரசுரிக்க உதவி வேண்டும். அந்தந்த வட்டாரத்துக்கான தினசரி, வாரச் செய்தித்தாள் முதலிய பத்திரிகைகளும் அதிகமாக வேண்டும். அப்போதுதான் பொதுமக்கள் வாசிப்புப் பழக்கத்தை விடாமல் மேற்கொள்ள முடியும்.

பொதுவாக இவ்வேலைகள் எல்லாம் கிராம ஆசிரியர்கள் செய்யலாமே என்று சுலபமாகப் பலர் சொல்லி விடுகிறார்கள். சௌகரியம் பெற்ற ஆசிரியர்கள் செய்யத்தான் செய்கிறார்கள். ஆனால் எல்லா ஆசிரியர்களும் இவ்விதம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதுதான் கேவலமாகிறது. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குள்ள கஷ்டங்களை நானே அனுபவித்திருக்கிறேன், நேரில் பார்த்திருக்கிறேன். அவைகளை இலக்கமிட்டு வர்ணிக்கத் தொடங்கினால் ஒரு புத்தகமாகும். இன்று முழுவதும் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆகவே அவைகளைப்பற்றி இங்கே சொல்லாமல் விடுகிறேன்.

நமது ஆசிரிய சங்கங்களைப்பற்றி மாத்திரம் நான் இங்கு முக்கியமாகச் சொல்ல வேண்டும். பொதுவாக எல்லாருக்குமே ஆசிரியர் சங்கம் என்றால் ஒரு இளக்காரமாகி விட்டது. மீட்டிங்கிலும் மகாநாட்டிலும் அடிக்கடி என்ன பேசுகிறார்கள்—திருப்பித்திருப்பிச் சொல்வதெல்லாம் சம்பளம் போதாது என்றுதான். இது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனால் மற்ற மகாநாடுகளில் என்னதான் பேசுகிறார்கள்—வக்கீல்களும், வைத்தியர்களும், ஆடிட்டர்களும் கூடிக் கூடிப் பேசிக் கோருவதெல்லாம் வேறு என்ன—சம்பளம், சலுகை, வசதி முதலியவைகள்தானே. பார்லிமெண்டு மெம்பர்கள்கூட தினசரிப்படி பிரயாணச் செலவு, மாதச் சம்பளம் என்றுதான் தீர்மானங்களும் யோசனைகளும் செய்கிறார்கள். ஆசிரியர்கள் மாத்திரம் சம்பள உயர்வைப்பற்றிய தீர்மானங்கள் செய்தால் குறை கூறுவது வழக்கமாய் விட்டது. ஆசிரிய சங்கங்கள் இக்குறையைப்பற்றி வீணாகக் கவலை கொள்ளவேண்டியதில்லை. சம்பள வசதிகளைப்பற்றிய பேச்சு ஒரு சிறிய பகுதிதான். ஆனால் சமூக நலனுக்கான பல பெரிய விஷயங்களைப்பற்றிய பேச்சுத்தான் அதிகம். தொழில் முன்னேற்றத்திற்கான யோசனைகளே முக்கியமெனக் கருதி அவ்விதமே இப்போது ஆசிரிய சங்கங்கள் உழைக்கின்றன. இதைப் பெருமையுடன் நாம் சொல்லிக்கொள்ள வேண்டும். இதர தொழிலாளரைப்போல நமக்கு விளம்பர வசதிகள் மிகவும் குறைவு.

அவர்கள் நடவடிக்கைகள் பிரமாதமாகப் பத்திரிகைகளில் படங்களுடன் பிரசுரமாகும். ஆனல் ஆசிரிய மகாநாட்டு நடவடிக்கைகள் அவ்விதம் பிரபலமாகப் பிரசுரமாவதில்லே. சம்பளச் சலுகைகள் பற்றிய பேச்சு மாத்திரம் தெரியும். இதர விஷயங்கள் நமது மேடையிலும் கொட்டகையிலும்தான். இது ஏன்? சுற்றிச் சுற்றி மறுபடியும் பழைய பல்லவிதான். பொதுஜன மதிப்பும் சர்க்கார் பொறுப்பும் ஆசிரியர் வாழ்க்கையிலும் தொழிலிலும் இன்னும் அதிகம் ஊன்றவேண்டும். இதற்கான கடமைகளே நாமும் செய்யவேண்டும்.

அன்பர்களே, இதுகாறும் பொறுமையுடன் கேட்டிருந்ததற்கு என் நன்றி. முக்கியமாக நமது முதல் அமைச்சர் இவ்விஷயத்தில் அக்கரைகொண்டு ஆசிரியர்களுக்கு அவசியமான திட்டங்களே வகுத்து உருவாக்குவார் என்ற திடமான நம்பிக்கை நம் எல்லாருக்கும் உண்டு. அவர் அமைக்கும் திட்டங்களேச் செவ்வனே நடத்தி வெற்றிகாண நாம் எல்லாரும் பாடுபடுவோம் என்ற உறுதியை அவருக்குச் சொல்கிறேன்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. சென்னே மாகாணத்திலுள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளேயும் சென்னே அரசாங்கமே எடுத்து நடத்துமாறு இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.
2. ஆரம்ப ஆசிரியர்களின், ஜில்லா, தாலூகாச் சங்கங்களுக்கு (யூனியன்களுக்கு) சர்க்கார் அங்கீகாரம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.
3. ஆசிரியரின் அடிப்படைச் சம்பள விகிதங்கள் எவ்வித பேதமின்றி கீழ்க் கண்டபடி நிர்ணயிக்கும்படி சென்னே அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

லோயர் கிரேட்	ரூ.	50
ஹையர் கிரேட்	,,	60
செகண்டரி கிரேட்	,,	80

4. ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு முடிய இலவசக் கல்வி அளிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.
5. மேல்சபைக்கு ஓட் அளிக்க ஆரம்ப ஆசிரியர்களுக்கும் உரிமை கொடுப்பதோடு அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும்படியும் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.
6. ராஜ்ய முழுவதும் கட்டாயக் கல்வி முறையை அமல் நடத்துவதோடு இலவசப் பகல் உணவு ஏழைக் குழந்தைகளுக்கு அளிக்கும்படியும் இம்மகாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

தெ. இ. ஆ. சங்கம்—பிரசாரம்

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் காப்புநிதி ஆர்கனேசர் ஸ்ரீ C. ரங்கநாதய்யங்கார் அவர்கள், போடிநாயக்கனூரில் 12-2-55ல் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டிற்குப் போயிருந்தார். ஆசிரியர்களிடம் காப்புநிதியைப்பற்றிப் பேசி, விண்ணப்ப பாரங்களேக் கொடுத்தார். ஸ்ரீ V. நடராஜன் அவர்களும் சின்னமனூர், தேனீ இவ்விரண்டு ஊர்களுக்கும் 13, 14 தேதிகளில் சென்று காப்புநிதியைப்பற்றிப் பிரசாரம் செய்து திரும்பினர்கள்.

புத்தக விமர்சனம்

சமுதாய வாழ்க்கை—முதற் புத்தகம்-ஆரும் வகுப்பு ரூ. 1—4—0

சமுதாய வாழ்க்கை — இரண்டாம் புத்தகம்-ஏழாம் வகுப்பு ரூ. 1—4—0

சமுதாய வாழ்க்கை—மூன்ரும் புத்தகம்-எட்டாம் வகுப்பு ரூ. 1—8—0

ஆசிரியர்கள் :

எ. என். ஷ்வார்ட்ஸ்,

எஸ். இ. ஜேயபாலன்

(Christian Literature Society)

இம்மூன்று புத்தகங்களும் ஆரம்பப் பள்ளி ஆருவது, ஏழாவது, எட்டாவது வகுப்புக்களுக்கு ரொம்ப சிறந்ததாயிருக்கின்றன. கல்வி இலாக்கா புதிய பாடத் திட்டப்படிக்கு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களுக்கு மிகவும் பயன்படும்.

கணக்கு : கற்பித்தல்

சூழ்நிலையைப் பயன்படுத்துதல்

T. S. ராஜகோபாலன், B.A., L.T.,

இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

இரண்டாம் வகுப்பில் குழந்தைகள் கற்க வேண்டுவன : (i) 1 முதல் 100 வரையில் எண்கள், (ii) $\frac{1}{2}$, $\frac{1}{4}$ என்ற பின்னங்கள், (iii) கஜம், அடி, அங்குலம் என்ற அளவுகள், (iv) படி, அரைப் படி, கால் படி என்ற முகத்தல் அளவைகள், (v) பெரும்பாலும் உபயோக மாகும் நாணயங்கள். இவற்றுள் (ii) முதல் (v) முடியவுள்ளவை சிறுவர்களின் சூழ்நிலை யிலேயே எப்போதும் பயன்படக்கூடியன. தாயார் இரண்டு குழந்தைகளுக்குத் தோசையை அல்லது ரொட்டியை இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கும்போது பாதி என்ற பின்னத்தைக் குழந்தைகள் கண்ணால் கண்டு மனதில் எளிதில் ஏற்றுக்கொள்ளு கின்றனர். இவ்வாறே இரண்டு குழந்தை கள் தங்களுக்குள் ரொட்டி, பழம் முதலிய வற்றைச் சமமாகப் பிரித்துக்கொள்ளும் போது பாதி என்பதை நன்கு உணர்கின்ற னர். இவ்வாறே கால் என்ற பின்னத்தை யும், அளவைகளில் அரைப் படி, கால் படி என்பனவற்றையும், நாணயங்களில் அரை யணா, காலணா, அரை ரூபாய், கால் ரூபாய்— இவற்றையும் அநுபவத்தின் மூலம் கற்கின் றனர் குழந்தைகள். ஆதலால் இவர்களது சூழ்நிலையை ஆதாரமாகக் கொண்டு மேற் கூறிய விஷயங்களைக் கற்பித்தால், குழந் தைகள் இவற்றை நன்கு உணர்வார்கள்.

அரை, கால் என்ற பின்னங்கள்

குழந்தைகள் கற்கவேண்டுவன : இரண்டு பாதி பாகங்கள் (அரை பாகங்கள்) கொண் டது ஒன்று, நான்கு கால் பாகங்கள் கொண்டது ஒன்று, இரண்டு கால் பாகங் கள் கொண்டது அரை.

உபகரணங்கள் : வட்டத் துண்டங்கள், செவ்வக வடிவமுள்ள காகிதத் துண்டங் கள், நூல் கயிறு, சோழிகள் அல்லது புளிய விரைகள்.

கற்பிப்பவர் முதன்முதலில் ஒரு வட்டத் துண்டை இரண்டு சம பாகங்களாகச் செய்து, ஒவ்வொன்றும் முழுத் துண்டில் பாதி என்று சொல்ல வேண்டும். குழந்தை களிடம் சில வட்டத் துண்டங்களைக் கொடுத்து ஒவ்வொன்றையும் சரி பாதியாக மடிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு வட்டமும் எத்தனை சரி பாதிகளாகப் பிரிக் கப்பட்டுள்ளது என்பதை மனதில் பதியும் படி செய்யவேண்டும். ஒரே அளவுள்ள இரண்டு அரைவட்டத் துண்டங்களைக் குழந் தைகளின் கையில் கொடுத்து, அவற்றை ஒன்றாகச் சேர்க்கச் சொல்லலாம். பின்பு செவ்வகத் துண்டங்களை, ஒவ்வொன்றையும் இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கச் செய்யலாம்.

பின்பு வகுப்பறையில் ஒரு பக்கத்தில் 4 பெஞ்சுகளும், மற்றப் பக்கத்தில் 4 பெஞ்சு களும் இருந்தால், மொத்த பெஞ்சுகளில் ஒரு பாதி ஒரு பக்கத்தில் இருப்பதாகவும், வேறொரு பாதி மற்றப் பக்கத்தில் இருப்ப தாகவும் சொல்லலாம். அதாவது 8 பெஞ்சுகளில் ஒரு பாதி 4 பெஞ்சுகள் என்று எண்ணிப் பார்த்துத் தெரிந்து கொள்ளும்படி செய்யலாம். 6 பிள்ளைகளை இரண்டு சம பாகங்களாகப் பிரித்து நிற்கச் செய்து, ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை பிள்ளைகள் என்று எண்ணச் செய்யலாம். இவ்வாறே 10 பிள்ளைகளில் பாதி, 12 பிள்ளைகளில் பாதி—எத்தனை பிள்ளைகள் என்பதையும் அறிந்துகொள்ளச் செய்ய லாம். பின்னர் இரட்டைப் படையான சோழிகளை (4 முதல் 16 அல்லது 20 வரை யில்) வைத்து, சோழிகளை இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கச் செய்யலாம்.

செவ்வக வடிவமுள்ள ஒரு காகிதத் துண்டை இரண்டு சரி பாதியாக மடித்து, மறுபடியும் இரண்டு சரி பாதியாக மடித்து, சம பாகங்கள் நான்கு என்று எண்ணித் தெரிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். நூல் கயிற்றை இதே மாதிரி நான்கு சம பாகங்களாக மடிக்கச் செய்யலாம். ஒவ் வொரு பாகத்திற்கும் கால் பங்கு அல்லது கால் என்பது பெயர் என்றும், நான்கு கால் பாகங்கள் கொண்டது ஒன்று என்றும் கற்பிக்கவேண்டும். வட்ட வடிவமான அட்டைத் துண்டை நான்கு சம பாகங்

களாக வெட்டி, இப்பாகங்களை முழுசாகப் பொருத்தச் செய்யலாம். இப்பாகங்களுள் இரண்டை, அல்லது மூன்றைக் கொடுத்து முழுசாகப் பொருத்த முடியுமா என்று குழந்தைகளை ஆராயச்செய்யலாம். இவர்கள் இரண்டு பாகங்களைப் பொருத்தும்போது கிடைக்கும் வடிவம் முழு வட்டத்தில் பாதி என்றும், இரண்டு கால் பாகங்கள் சேர்ந்து பாதி ஆகும் என்றும் தெரிந்து கொள்வார்கள்.

நாணயங்களும், $\frac{1}{2}$, $\frac{1}{4}$ என்ற பின்னங்களும்

நமது தினசரி வாழ்க்கையில் பண்டங்கள் வாங்கும்போதும் விற்கும்போதும் உபயோகிக்கும் நாணயங்கள் அணா, அரையணா, காலணா, ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் என்பன. இந்த நாணயங்களைக் குழந்தைகள் வீட்டிலேயே கையில் எடுத்துப் பார்த்திருப்பார்கள். எனினும் வகுப்பில் இவற்றைக் கற்பிப்பதற்கு, இவை போன்ற மாதிரி நாணயங்கள் (அட்டையில் செய்தவை) நன்கு பயன்படும்.

முதன்முதலில் ஓரணா நாணயம், அரையணா நாணயம், காலணா நாணயம்—இவற்றைக் குழந்தைகளுக்குக் காட்டி, இவற்றுள் இந்த இந்த நாணயம் இன்ன இன்ன மதிப்புடையது என்பதைக் குழந்தைகள் அறிந்து கொள்ளும்படி செய்யவேண்டும். பின்பு

இரண்டு பாதிகள் (அரை பாகங்கள்) கொண்டது ஒன்று,

இரண்டு அரையணாக்கள் சேர்ந்து ஓரணா என்று கற்பிக்கவேண்டும். இவ்வாறே நான்கு காலணாக்கள் சேர்ந்து ஓரணா, இரண்டு காலணாக்கள் சேர்ந்து அரையணா என்று குழந்தைகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்த விஷயங்கள் மனதில் பதிந்துள்ளனவா என்பதற்குப் பின்வரும் சோதனைகள் பயன்பெறும் :

சோதனை 1

(1) (ஓரணாவைக் காட்டி) இதன் பெயர் என்ன ?

(2) (அரையணாவைக் கையில் வைத்துக் கொண்டு) கையில் எவ்வளவு இருக்கிறது ?

(3) (அரையணாக்களைக் காட்டி) எனக்கு ஓரணா கொடு.

(4) (காலணாக்களைக் காட்டி) எனக்கு அரையணா கொடு.

(5) (காலணாக்களைக் காட்டி) எனக்கு ஓரணா கொடு.

(6) (அரையணாக்களைக் காட்டி) எனக்கு 2 அணா எண்ணி வை.

(7) (கையில் ஓரணாவைக் காட்டி) இதற்குக் காலணாக்கள் தா.

(8) (கையில் ஓரணாவைக் காட்டி) இதற்கு அரையணாக்கள் தா.

சோதனை 2 (கடை விளையாட்டு).

உபகரணங்கள் : மாதிரி நாணயங்கள், பலபம், மிட்டாய் முதலியன். பலபம் ஒன்று காலணா, மிட்டாய் ஒன்று காலணா, ஊதல் ஒன்று அரையணா என்று இவ்வாறு பண்டங்களின் விலைகளைச் சிறுவர்களுக்கு முதலில் சொல்லிவிடவேண்டும். குழந்தைகளை விற்பவனாகவும் வாங்குபவர்களாகவும் பின்வருமாறு நடிக்கச் செய்யலாம் :

முதல் குழந்தை : (ஓரணா கொடுத்து) ஐயா, ஒரு ஊதல் போக மீதி கொடுங்கள்.

இரண்டாங் குழந்தை : (ஓரணா கொடுத்து) ஒரு மிட்டாய் வாங்கினேன். மீதி கொடுங்கள்.

* * *

ஒரு குழந்தை : (காலணாவை நீட்டி) ஒரு ஊதல் வாங்கினேன்.

விற்பவன் : மீதி காலணா எங்கே ?

* * *

ஒரு குழந்தை : (விற்பவனைப் பார்த்து) இந்த ஓரணாவுக்குக் காலணா கொடுங்கள்.

* * *

இந்த முறைப்படியே குழந்தைகளுக்குப் பின்வருவனவற்றைக் கற்பிக்கவேண்டும் :

இரண்டு அரை ரூபாய்கள் கொண்டது ஒரு ரூபாய்.

நான்கு கால் ரூபாய்கள் கொண்டது ஒரு ரூபாய்.

இரண்டு கால் ரூபாய்கள் கொண்டது அரை ரூபாய்.

பயிற்சிகள் முன்போல்.

படி, அரைப் படி, கால் படி

கடைகளில் பண்டங்கள் வாங்கும்போதும், வீட்டில் சமைப்பதற்கு அரிசி அளக்கும்போதும், படி, அரைப் படி, கால் படி—இவை உபயோகமாவதைக் குழந்தைகள் கவனித்திருப்பார்கள். வகுப்பறையில்

இந்த அளவைகளைக்கொண்டு குழந்தைகளை அளக்கச் செய்தால், முன் பகுதிகளில் வந்துள்ள பின்னங்களைப் பற்றிய விஷயங்கள் நன்கு வேரூன்றிவிடும். இந்த அளவைகளை உபயோகிக்கும்போது தெரிந்து கொள்ள வேண்டுவன :

(i) ஒரு படி அளவை மிகப் பெரியது, அடுத்தது அரைப் படி அளவை, அடுத்தது கால் படி அளவை.

(ii) இவற்றால் அரிசி, பருப்பு முதலியனவற்றை அளக்கும்போது விளிம்பிற்கு மேல் கூம்பாக அளக்கவேண்டும்.

(iii) ஒரு படி அளப்பதற்கு அரைப் படியால் இரண்டு தரம் அளக்கலாம்.

(iv) ஒரு படி அளப்பதற்குக் கால் படியால் நான்கு தரம் அளக்கலாம்.

(v) அரைப் படி அளப்பதற்குக் கால் படியால் இரண்டு தரம் அளக்கலாம்.

இந்த அளவைகளின் பெயரையும், இவற்றை உபயோகித்து அளக்கவும் கற்பித்த பின்னர், பின்வரும் பயிற்சிகள் பயன்படும் :

1. ஒவ்வொரு அளவையைக் கொண்டும் அளந்து, மணற் குவியல்கள் குவிக்கச் செய்து, ஒவ்வொரு குவியலையுங் காட்டி, எவ்வளவு படி என்று சொல்லச் செய்வது.

2. தனியாக ஒரு-படிக் குவியல், அரைப் படிக் குவியல், கால் படிக் குவியல், குவித்து வைத்து, இவற்றுள் எது அரைப் படிக் குவியல் என்று கேட்பது.

3. அரைப் படி அளவையைக் கொடுத்து, ஒரு படி மணல் குவிக்கச் செய்வது.

4. கால் படி அளவையைக் கொடுத்து, ஒரு படி மணல் குவிக்கச் செய்வது.

5. கால் படி அளவையைக் கொடுத்து, அரைப் படி மணல் குவிக்கச் செய்வது.

நீட்டல் அளவை : கஜம், அடி, அங்குலம்

கடையில் துணி வாங்கும்போது, கஜக் கோல் உபயோகமாவதைக் குழந்தைகள் கவனித்திருப்பார்கள். வகுப்பறையில் நான்கு சம பாகங்களாகப் பிரித்த கஜக் கோலை உபயோகித்து, முதன் முதலில் கஜக் கோலைக் கொண்டு, குழந்தைகளை வகுப்பறையின் நீள அகலங்களை முழு கஜத்தில் அளக்கச் செய்யலாம். பின்பு ஒரு கஜம் பட்டு நூலை இரண்டு சம பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு பாகமும் அரை கஜம் என்று சொல்லச் செய்யவேண்டும். ஒரு துண்டைக் கஜக் கோலின் ஒரு முனையிலிருந்து கோலில் படியுமாறு வைத்து, கோலின் நடுவிலுள்ள அடையாளம் அரை கஜத்தைக் காட்டும் என்பதை உணர்த்த வேண்டும். பின்பு கஜக் கோலைக் கொண்டு அரை கஜம் நூல் அல்லது ரிப்பன் அளக்கச் செய்யவேண்டும். இவ்வாறே கால் கஜத்தைக் காட்டும் அடையாளங்களைக் காட்டி, கஜக் கோலைக் கொண்டு கால் கஜம் நூல் அல்லது ரிப்பன் அளக்கச் செய்யவேண்டும். கஜக் கோலை இவ்வாறு உபயோகிக்கும் போது குழந்தைகள் கற்கவேண்டுவன :

(1) அரை கஜ அளவுகள் இரண்டு கொண்டது முழு கஜம்,

(2) கால் கஜ அளவுகள் நான்கு கொண்டது முழு கஜம்,

(3) கால் கஜ அளவுகள் இரண்டு கொண்டது அரை கஜம்.

இந்த வகுப்பில் குழந்தைகளுக்கு வகுப்பறையில் உபயோகப்படும் ஓரடிச் சட்டம், அரையடி அடையாளமும், கால் அடி அடையாளங்களும் கொண்டதாக இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தைக் கொண்டு பெஞ்சுகளின் நீளத்தை முழு அடியாக அளக்கச் செய்து, பின்பு அரையடி, கால் அடி என்பவற்றைக் கற்பித்து, பின் வருவனவற்றைக் குழந்தைகள் நன்கு ஏற்கும்படி செய்யவேண்டும் :

(1) அரையடி அளவுகள் இரண்டு கொண்டது ஒரு அடி,

(2) கால் அடி அளவுகள் நான்கு கொண்டது ஒரு அடி,

(3) கால் அடி அளவுகள் இரண்டு கொண்டது அரையடி.

கஜம், அடி—இவற்றைப் பற்றிச் சிறுர்கள் நன்குணர்ந்த பின்புதான் அங்குலம் என்பது என்ன என்பதை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். இவ்வாறு கற்பிப்பதற்கு வேண்டிய உபகாரணங்கள்: (i) 12 அங்குலம் வரையில் அங்குலங்களாக மாத்திரம் பிரிக்கப்பட்டுள்ள ஓரடிச் சட்டம், (ii) முழு அங்குலமும், அரை அங்குலமும், கால் அங்குலமும் காட்டப்பெற்ற ஓரடிச் சட்டம். முதலில் சொல்லிய சட்டத்தைப் பயன்படுத்திக் குழந்தைகளைப் புத்தகங்களின்

நீள அகலங்களை முழு அங்குலமாக அளக்கச் செய்து, பின்பு மற்ற அடிச் சட்டத்தைக்கொண்டு, அரை அங்குலம், கால் அங்குலம் நீளமுள்ள ஈர்க்குக் குச்சிகளை அளக்கச் செய்யவேண்டும்.

பின்வரும் பயிற்சிகள், ஒன்று, அரை, கால் இவற்றின் தராதரத்தையும், ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தத்தையும் குழந்தைகள் நன்கு பதித்துக்கொள்ள பயன்படும்.

(1) கால் அடி, அரை அடி, ஓரடி நீளமுள்ள மூங்கில் சிம்புகளைக்காட்டி, "இவற்றுள் ஓரடி நீளமுள்ளது எது?" "கால் அடி நீளமுள்ளது எது?' என்று கேட்பது.

(2) கால் கஜம், அரை கஜம், ஒரு கஜம் நீளமுள்ள நூல் அண்டங்களைக் காட்டி, மேலுள்ள பயிற்சியில்போல் கேட்பது. இவ்வாறே கால் அங்குலம், அரை அங்குலம், ஒரு அங்குலம் நீளமுள்ள ஈர்க்குச்சிகளைக் காட்டிக் கேட்பது.

(3) அரை அடி நீளமுள்ள மூங்கில் சிம்புகளைக் காட்டி, "ஓரடி நீளத்திற்குச் சிம்புகளைச் சேர்த்து நீட்டி வை" என்று சொல்லுவது; கால் அடி நீளமுள்ள சிம்புகளைக் காட்டி, "ஓரடி நீளத்திற்குச் சிம்புகளைச் சேர்த்து நீட்டி வை", "அரையடி நீளத்திற்குச் சிம்புகளைச் சேர்த்து நீட்டி வை" என்பது. இவ்வாறே கால் கஜம், அரை கஜம், ஒரு கஜம், நீளமுள்ள கயிறுகளைக் கொண்டும், கால் அங்குலம், அரை அங்குலம், ஓரங்குலம் நீளமுள்ள ஈர்க்குக் குச்சிகளைக் கொண்டும்.

ஆக, இவ்வகுப்பில் சிறுர்கள் எண்களைத் தவிரக் கற்கவேண்டுவன அரை, கால் என்ற பின்னங்களும், இந்த பின்னங்கள் சூழ்நிலையில் எவ்வாறு பயன்படுகின்றன என்பதுமாகும். இந்த பின்னங்களின் பெயரையும், தராதரத்தையும், ஒன்றுக்கொன்று உள்ள சம்பந்தத்தையும் நாணயங்கள், முகத்தலளவை, நீட்டலளவை—இவற்றைக் கொண்டு சிறுர்கள் தெரிந்துகொள்ளும்படி கற்பிப்பதால், இனிவரும் வகுப்புக்களில் பின்னங்களைப்பற்றிக் கற்கவேண்டியதற்கு இது தக்க அடிப்படையாகும்.

தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.

தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

	அணா		அணா
1. மகாத்மா காந்தி	10	4. கவியரசி சரோஜினி	8
2. கவியரசர் தாகூர்	8	5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்)	12
3. தேசிய கவி பாரதியார்	8		

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10   7. சுவாமி விவேகானந்தர் அணா 12

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

CONNEMARA PUBLIC LIBRARY
7 - AUG 1956
MADRAS

மௌன வாசிப்பு

மாதிரிப் பயிற்சிகள்

V. நடராஜன்

சில மாதிரிப் பயிற்சிகளை இந்த இதழில் தருகிறோம். 3, 4, 5 வகுப்புக்களுக்கேற்ற இரண்டு இரண்டு வாசிப்புப் பகுதிகளைப் பிரசுரிக்கிறோம். ஒவ்வொன்றிலும் வாசிப்பு நேரம் குறிப்பிட்டிருக்கிறது. அந்த நேரத்தில் படித்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு பகுதியையும் கார்பன் தாள் வைத்து எழுதிப் பல பிரதிகள் செய்துகொண்டு உபயோகிக்கலாம். படிப்பு முடிந்தவுடன் கிரகித்தல் சோதனை அவசியம். அதற்கான மாதிரி வினாக்களும் குறித்திருக்கிறோம். ஆசிரியர்கள் இதேமாதிரி வேறு வினாக்களையும் தரலாம். ஆனால் முக்கியம் என்னவென்றால் சுலபமாக விடைகள் தரும்படி இருக்க வேண்டும். வகுப்பு பீரியட் காலத்திலேயே வாசிப்பு, கிரகித்தல் சோதனை, மதிப்பீடு எல்லாம் முடிந்துவிடும்படி திட்டமிட வேண்டும்.

இன்னொரு விஷயம்—சொற்கள் எண்ணிக்கை யிடுவதில் விவாதம் செய்யவேண்டிய அவசியமில்லை. வாசிப்புப் பகுதியின் அளவைத் திட்டமிடுவதற்கே இந்தக் கணக்கு. சாதாரண சில சொற்றொடர்களை இரண்டு அல்லது மூன்றும் கணக்கிடலாம், அல்லது ஒரே சொல்லாகவும் சில சமயம் கணக்கிடுவதால் பாதகமில்லை. முக்கிய கருத்தை நாம் கொள்ளவேண்டுமேயல்லாது, இதில் விவாதம் செய்ய வேண்டாம்.

6, 7, 8 வகுப்புக்களுக்கான சில மாதிரிப் பயிற்சிகளை இன்னொரு இதழில் பிரசுரிப்போம்.

குறிப்பு :—ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவையென்று பத்திராதிபருக்கு எழுதினால் வாசிப்புப் பயிற்சிப் பகுதிகளை மாத்திரம் பிரசுரித்துத் தர ஏற்பாடு செய்வார். ஒவ்வொரு வகுப்பிற்கும் குறைந்த பட்சமாக 50 பிரதிகள் வேண்டியிருக்கும். சுமார் 2000 பிரதிகள் மொத்தம் தேவையென்று ஆசிரிய சங்கங்களிலிருந்து ஆர்டர்கள் கிடைக்குமாயின், அப்பிரதிகளை (கிரகித்தல் சோதனைகளும் விடைகளும் சேர்ந்து) அச்சிட வசதியாயிருக்கும். விலையும் சரசமாயிருக்கும். ஆசிரியர்களிடமிருந்து கடிதங்கள் கிடைத்தபிறகு இவ்விஷயமாகப் பத்திராதிபர் தென் இந்திய ஆசிரிய சங்க நிர்வாகிகளுடன் கலந்து யோசித்து விடை எழுதுவார்.

3-ம் வகுப்பு. பயிற்சி—1.

நேரம்—5 நிமிஷம். 45 சொற்கள்.

தமிழ் நாட்டில் காவேரி நதி முக்கியமானது. காவேரி கொண்டு வரும் வெள்ளம் நமக்கு மிகவும் உதவுகிறது. காவேரியிலிருந்து நீர் பாய்ச்சி நெல் பயிரிடுகிறோம். சோழ நாட்டின் வளமே காவேரியின் கொடை, அதன் செல்வத்திற்குக் காவேரியே ஆதாரம். காவேரியின் பெருமையினால் சோழநாடு சோறு உடைத்து என்ற புகழ் ஏற்பட்டது. காவேரியை அம்மன் என்று தமிழ் மக்கள் கொண்டாடி மகிழ்கிறார்கள். ஆடிப்பெருக்கு முக்கியமான பண்டிகை.

கிரகித்தல் சோதனை—

1. காவேரி என்ன கொண்டு வருகிறது ?,
2. காவேரியை ஏன் கொண்டாடுகிறோம் ?
3. பூர்த்தி செய்—
   (a) ————நீர் பாய்ச்சி நெல் பயிரிடுகிறோம்.
   (b) சோழ நாட்டின் —— காவேரியின்———
   (c) ——————காவேரியே ஆதாரம்.

பயிற்சி—2.

நேரம்—5 நிமிஷம். 53 சொற்கள்

ரயில் இஞ்சின் வேலை செய்ய நிலக்கரி வேண்டும். கப்பல் இஞ்சினுக்கும், பஞ்சு ஆலை யந்திரங்களுக்கும் நிலக்கரி வேண்டும். பூமிக்குள் இருந்து நிலக்கரி கிடைக்கும். சில இடங்களில்தான் நிலத்தின் ஆழத்தில் நிலக்கரி இருக்கும். பல்லாயிர வருஷங்களுக்கு முன் இருந்த காட்டு மரங்கள் பூமிக்குள் புதைந்துவிட்டன. மேலும் மேலும் மண் அடுக்குகள் படிந்து மூடிவிட்டன. அம்மரங்கள் இப்போது நிலக்கரியாக நமக்கு உதவுகின்றன. நமது நாட்டில் ராணிகஞ்சு என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் இருக்கின்றன.

கிரகித்தல் சோதனை—

அ. பூர்த்தி செய்———

1. நிலக்கரி ———— இருந்து கிடைக்கும்.
2. ராணிகஞ்சில் ——— ச் சுரங்கங்கள் உண்டு.
3. ரயில் இஞ்சின் வேலை செய்ய ———— வேண்டும்.
4. காட்டு மரங்கள் பூமிக்குள் ——— விட்டன.

ஆ. சரியா தப்பா ? (சரி என்றால் √ குறி இடு, தப்பு என்றால் X குறி இடு)

1. நிலக்கரி மரத்தில் காய்த்துத் தொங்கும்.
2. பூமிக்குள் புதைந்த மரங்கள் நிலக்கரி ஆயின.
3. பூமியில் எங்கே வெட்டினாலும் நிலக்கரி கிடைக்கும்.
4. பஞ்சு ஆலை யந்திரங்களுக்கு நிலக்கரி வேண்டும்.

4-ம் வகுப்பு. பயிற்சி—1.

நேரம்—8 நிமிஷம். 120 சொற்கள்.

ஔவையாரைப்பற்றிப் பல கதைகள் உண்டு. இங்கு ஒரு கதையைப் படியுங்கள்.

ஒருசமயம் அவள் ஒரு ஊருக்கு நடந்து சென்றாள். வழியில் அவளுக்கு மிகவும் களைப்பு உண்டாயிற்று. சுற்றுமுற்றும் பார்த்தாள். அங்கு ஒரு நாகமரக் கிளையில் ஒரு சிறுவன் உட்கார்ந்திருந்தான். "எனக்குப் பசிக்கிறது, பையா ! எனக்குச் சில நாகப்பழங்கள் பறித்துப் போடு" என்று கேட்டாள்.

“ பாட்டி ! உங்களுக்குச் சுடும்பழம் வேண்டுமா, சுடாப்பழம் வேண்டுமா?” என்று பையன் கேட்டான். பாட்டிக்கு ஒன்றும் விளங்கவில்லை. பழம் சுடுமா என்று நினைத்தாள்.

“ சுடாத பழமே போடு ” என்று சொன்னாள்.

பையன் மரக்கிளையை உலுக்கிவிட்டான். பொல பொல என்று பழங்கள் விழுந்தன. பழுத்த பழங்களை மாத்திரம் பாட்டி பொறுக்கி எடுத்து, அவைகள்மேல் ஒட்டியிருந்த தூசியை ஊதினாள். பிறகு பழத்தை வாயில் போட்டுக்கொண்டாள்.

பையன் கைகொட்டிச் சிரித்தான்.

“ பாட்டி ! சுடாத பழம் கேட்டுவிட்டுச் சுடும் பழங்களைப் பொறுக்கினீர்களே !” என்றான்.

பாட்டிக்கு மிகவும் வெட்கமாய்விட்டது. “ அட ! இந்தச் சிறுவனுக்குத் தெரிந்த விஷயம் நமக்குத் தெரியாமல் போயிற்றே !” என்று ஆச்சரியப்பட்டாள்.

கிரகித்தல் சோதனை—

1. சுடும் பழங்கள் எவை ?
2. பழங்கள் நிஜமாகவே சூடாக இருந்தனவா ?
3. ஔவைப் பாட்டிக்கு ஏன் வெட்கமாயிற்று ?
4. பூர்த்தி செய் ——

(அ) பொறுக்கிய பழங்களைப் பாட்டி ஊதினாள், ஏனென்றால் (அவைகள் சூடாயிருந்தன, அவைகள்மேல் தூசி ஒட்டியிருந்தது, அவைகள் உடைந்திருந்தன.)

(ஆ) பாட்டிக்கு வெட்கமாயிற்று, ஏனென்றால் (சிறிய பையனிடம் ஏமாந்தோமே யென்று, பழுத்த பழம்தான் சுடும் பழம் என்று தெரியாமல் போயிற்று என்று, பசிபடங்க நாகப் பழம் தின்னவேண்டி யிருந்ததே என்று.)

பயிற்சி—2.

நேரம்—10 நிமிஷம். 200 சொற்கள்.

மதுரைப் பட்டணம் வைகை நதியருகே உள்ளது. முன்காலத்தில் பாண்டிய ராஜாக்கள் மதுரையில் ஆட்சி செய்திருந்தார்கள். இப்போது தமிழ் நாட்டில் சென்னைக்கு அடுத்தபடியான மிகப் பெரிய பட்டணம் மதுரை.

மதுரையின் பழங் கதைகளெல்லாம் மதுரை ஸ்தலபுராணத்தில் படிக்கலாம். மதுரையில் மிகவும் புகழ் பெற்றது அங்குள்ள மீனாட்சியம்மன் கோவில். பாண்டியராஜன் புதல்வி மீனாட்சி. தடாதகைப்பிராட்டி என்றும் அவளுக்குப் பெயர் உண்டு. பரமசிவன் மனைவியாகிய பார்வதி தேவியே மீனாட்சியாக அவதரித்தாள். அரசனுக்கு அவள் ஒருவளே புதல்வி, வேறு புதல்வர் இல்லை. இளவரசியாகிய மீனாட்சியும் பாண்டியசேனைத் தலைவியாகப் போர் புரிந்து வெற்றி கொண்டாள். அவளுக்கு மணப்பருவம் வந்த

வுடன் அவள் பெற்ருேர்கள் என்ன செய்வதென்று கவலைப்பட்டனர். பரமசிவனே மீனுட்சியை மணந்துகொள்ள வந்தார். மீனுட்சியின் விவாகம் மதுரையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விவாகத்திற்கெனச் செய்த விருந்துப் பண்டங்கள் ஏராளமாக மிகுந்து போயின. "உங்களுடன் பலர் வருவார்கள் என நினைத்துப் பிரமாதமாக விருந்து தயார் செய்திருந்தோம். ஆனல் அதிக ஜனங்கள் வரவில்லை. வெகு பண்டங்கள் மிகுந்துவிட்டன" என்று மீனுட்சி தன் கணவனுடன் சொன்னுள். சோமசுந்தரம் சிரித்துக்கொண்டு, "ஓ! அப்படியா! இதோ என் ஆட்களில் ஒருவன் பசியினல் தவிக்கிருன். அவனுக்கு முதலில் உணவு கொடு" என்ருர்.

"இது ஒரு பிரமாதமா?" என்று மீனுட்சி எண்ணி, அவனை அழைத்துக்கொண்டு போய் விருந்து அளித்தாள். அந்த ஆள் பெயர் குண்டோதரன். அவனுக்கு அகோரப் பசி. அரண்மனை ஆட்கள் கொடுத்தவைகளை யெல்லாம் சாப்பிட்டுவிட்டான். அவன் பசி அடங்கவில்லை. "இவ்வளவுதானு! இன்னும் ஒன்றும் கிடையாதா? என் பசிக்கு இது எந்த மூலை! ஐயோ! பசி பொறுக்க முடியவில்லையே!" என்று அவன் கூக்குரலிட்டான். மீனுட்சிக்கு மிகவும் வெட்கமாகிவிட்டது. கணவனிடம் சென்று தலைவணங்கி மெதுவாக விஷயத்தைச் சொன்னுள். சோமசுந்தரமும் புன்சிரிப்புடன் "எல்லாப் பண்டங்களும் தீர்ந்துபோயினவா?" என்று கேட்டார்.

"ஸ்வாமி! என்னை மன்னிக்கவேண்டும். ஏதோ விளையாட்டுப் பெருமையில் சொல்லிவிட்டேன். அவன் பசியால் துடிக்கிருன். நீங்கள்தான் உதவி செய்யவேண்டும்" என்று மீனுட்சி வேண்டிக் கொண்டாள். உடனே சோமசுந்தரம் ஒரு அண்டா நிறைய உணவு அளித்து குண்டோதரனை உண்ணச் சொன்னுர். எடுக்க எடுக்கக் குறையாத அந்த உணவு உண்டபிறகு குண்டோதரன் பசி அடங்கியது. அவன் தாகம் தீர வைகை ஆற்றையே குடிக்கும்படி உத்தரவு செய்தார். கங்கை போய் வைகை நதி பிரவாகமாய் ஓடியது. குண்டோதரன் நீர்அருந்தி மகிழ்ந்தான். இவ்வாறு தன் கணவனது பெருமையை மீனுட்சி அறிந்து சந்தோஷம் கொண்டாள்.

மதுரைக்கோவிலில் மீனுட்சியும் சோமசுந்தரக் கடவுளும் இருக்கிருர்கள். தினந்தோறும் பல்லாயிர ஜனங்கள் இறைவனையும் அம்மனையும் வணங்கி பூசிக்கிருர்கள்.

குண்டோதரன் கதை மதுரைப் புராணத்தில் உள்ளது. கோவில் சுவர்களில் இக்கதைச் சித்திரங்களைக் காணலாம். யாராவது பெரும் பசிகொண்டு பெருந்தீனி உண்டால், "நீ என்ன குண்டோதரனு?" என்று ஜனங்கள் சொல்வது வழக்கம்.

கிரகித்தல் சோதனை :—

1. மதுரையில் மிகவும் புகழ்பெற்றது எது?
2. மீனுட்சியை மணந்துகொள்ள வந்தவர் யார்?
3. குண்டோதரன் பசி என்ருல் என்ன?

4. *சரியா, தப்பா?*

சரி என்றால் √, தப்பு என்றால் × இவ்விதம் குறி இடு.

(அ) *குண்டோதரன் மதுரையில் ராஜாவாக இருந்தான்.*

(ஆ) *மதுரை அருகே வைகை ஆறு ஓடுகிறது.*

(இ) *மதுரைக் கோவிலில் குண்டோதரன் கதைப் படங்களைக் காணலாம்.*

(ஈ) *மதுரை என்றவுடன் காமாட்சிஅம்மன் கோவில் நினைவு வரும்.*

5-ம் வகுப்பு. பயிற்சி—1.

நேரம்—8 நிமிஷம் 185 சொற்கள்.

ரண சிகிச்சை செய்யும்போது நோயாளிகளுக்கு வலி தெரியாமலிருக்க இப்போது மயக்க மருந்தை வைத்தியர்கள் உபயோகிக்கிறார்கள். இம்மருந்தை நோயாளிகள் சுவாசித்த சிறிதுநேரத்தில் மெய்ம்மறந்து தூங்கி விடுகிறார்கள். அப்போது கத்தி, கத்தரிக்கோல், குரடு, துழாவுகோல் முதலிய நுட்ப ஆயுதங்களை வைத்தியர்கள் உபயோகித்து ரணங்களை அறுத்துச் சேதமான சதைகளை நீக்கி, சீழ் அசுத்தங்களை அகற்றுவார்கள். சிலசமயம் அறுத்த சதைகளைத் தைத்துச் சீர்ப்படுத்துவார்கள். மயக்கத்திலிருக்கும் நோயாளிக்கு வலி தெரியாது. சிகிச்சை முடிந்து பிரக்ஞை திரும்பி வந்தபிறகே அவனுக்கு வலி உணர்ச்சி தோன்றும்.

இந்த மயக்க மருந்தைக் கண்டுபிடித்து உதவியவர் ஜேம்ஸ் சிம்ஸன். அவர் ஸ்காட்லாந்து தேச வைத்தியர். மனித சமூகத்திற்குப் பேருதவிசெய்த பரம உபகாரி என்று நாம் அவரைப் புகழ்ந்து கொண்டாடுகிறோம்.

மயக்க மருந்து உபயோகம் தெரியாத முன்னாட்களில் சிகிச்சையின்போது நோயாளிகள் மிகவும் கஷ்டப்பட்டு வலி தாங்காமல் துடித்துக் கதறுவார்கள். கைகால்களை உதைத்துக்கொள்வார்கள். அவர்களை அழுத்திப் பிடித்துக்கொண்டு அசையாமல் இருக்கும்படி செய்யவேண்டும். மயக்க மருந்து உபயோகிக்கும் வழக்கம் ஏற்பட்ட பிறகு இவ்விதக் கஷ்டம் இல்லை. வைத்தியர்கள் நிதானமாகச் சிகிச்சை செய்கிறார்கள். ஆளின் தன்மைக்கேற்றவாறு மயக்க மருந்து அளவாகக் கொடுத்து, மயக்கம் தெளியுமுன் சிகிச்சையை அதிவேகமாகவும் சாமர்த்தியமாகவும் செய்து முடிக்கிறார்கள். மயக்க மருந்து கொடுப்பதிலும் அனுபவமும் திறமையும் அவசியம். அனுபவமில்லாத கற்றுக் குட்டிகள் மயக்க மருந்து கொடுப்பதால் ஆபத்து சம்பவிக்கலாம். மயக்கம் தெளிந்து பிரக்ஞை திரும்பி வராமலே பெருந் தூக்கத்தில் நோயாளிகள் மூழ்கிவிடக் கூடாதல்லவா? ஆகவே அனுபவசாலிகளே மயக்க மருந்து அளிப்பர்.

கிரகித்தல் சோதனை :—

1. *இதற்கு ஒரு தலைப்புப் பெயர் கொடு.*
2. *இம்மருந்து கண்டுபிடித்தவரை ஏன் புகழ்கிறோம்?*

3. மயக்க மருந்தினுல் நோயாளிக்கு என்ன சௌகரியம் ?
4. மயக்க மருந்தினுல் வைத்தியருக்கு என்ன சௌகரியம் ?
5. சரியா, தப்பா—
சரி என்ருல் √ என்றும் தப்பு என்ருல் × என்றும் குறி இடு.

(அ) மயக்க மருந்தினுல் நோயாளி வலி பொறுக்க முடியாமல் கதறுவான்.

(ஆ) மயக்கத்திலிருக்கும் நோயாளியின் புண்களை வைத்தியர் நிதானமாகச் சோதித்துச் சிகிச்சை செய்ய முடியும்.

(இ) மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்ட பிறகு ஜனங்களது கஷ்டங்கள் அதிகமாயின.

6. பூர்த்தி செய் :—

(அ) மயக்க மருந்து சுவாசித்த பிறகு நோயாளிக்கு———தெரியாது.

(ஆ) மயக்க மருந்து தருமுன் வைத்தியர் நோயாளியின் ——— அறிய வேண்டும்.

(இ) மயக்கம் தெளிந்து ——— வருமுன் வைத்தியர் சிகிச்சையை முடிக்க வேண்டும்.

பயிற்சி—2.

நேரம்—10 நிமிஷம். 250 சொற்கள்.

ஒருநாள் கந்தன் தன் கிராமத்திலிருந்து பட்டணம் பார்க்கச் சென்ருன். ரயில் வண்டியில் பிரயாணம் செய்த ஜனங்கள் பேசிக்கொண்டிருந்ததை அவன் கவனித்தான்.

ஒருவர் ஒரு கடிதத்தை இன்னொருவரிடம் கொடுத்து, " ஐயா! இதைக் கொஞ்சம் படித்துச் சொல்லுங்கள் " என்று கேட்டார். " நான் கண்ணுடி கொண்டுவரவில்லை. ஆகையினுல் படிக்கமுடியாது " என்று பதில் சொன்னுர். அருகில் இருந்த மற்றொருவர் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டார். தன் சட்டை ஜோபியிலிருந்து மூக்குக்கண்ணுடியை எடுத்துப் போட்டுக்கொண்டார். பிறகு கடிதத்தைப் படித்தார்.

கந்தனுக்கு ஆச்சரியமாயிருந்தது. " ஐயா, மூக்குக் கண்ணுடி போட்டுக்கொண்டால் படிக்க முடியுமா ?" என்று கேட்டான். " நன்ருகப் படிக்க முடியும் " என்று அவர் பதில் சொன்னுர்.

பட்டணம் சேர்ந்தவுடன் தான் ஒரு மூக்குக்கண்ணுடி வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டுமென்று கந்தன் தீர்மானித்தான். " மூக்குக் கண்ணுடி போட்டுக்கொண்டால் நானும் வாசிக்கலாம் " என்று எண்ணி மகிழ்ந்தான். மூக்குக் கண்ணுடிகள் விற்கும் ஒரு கடைக்குள் நுழைந்தான். " ஐயா, படிக்கும் மூக்குக் கண்ணுடி எனக்கு வேண்டும் " என்று அறிவித்தான். பற்பல மூக்குக் கண்ணுடிகள் உள்ள பெட்டியைக் கடைக்காரர் கொண்டு வந்தார். ஒரு ஜோடியை எடுத்துக் கந்தனுக்கு மாட்டிய பிறகு அவனைப் படிக்கச் சொன்னுர். கந்தனுல் படிக்க முடியவில்லை. இன்னொரு ஜோடியை எடுத்து மாட்டினுர். அப்போதும் கந்தனுல் படிக்க மு

வில்லை. வேறு ஒரு ஜோடி மாற்றிப் போட்டும் பலன் இல்லை. இவ்வாறு பற்பல மூக்குக் கண்ணாடிகளை மாற்றி மாற்றி போட்டுப் பார்த்தும் கந்தனால் வாசிக்க முடியவேயில்லை. கடைக்காரருக்கு மிகவும் சலிப்பு ஆகிவிட்டது. திடீர் என்று அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

"ஐயா! கண்ணாடி யில்லாமல் உமக்குப் படிக்க வருமா?" என்று கேட்டார்.

"கண்ணாடி இல்லாமல் படிக்கத் தெரிந்தால், உங்கள் கடையைத் தேடி நான் ஏன் கண்ணாடி வாங்க வருகிறேன்?" என்று கந்தன் சட்டென்று விடை அளித்தான். தான் எண்ணியது சரியென அறிந்த கடைக்காரர் விழுந்து விழுந்து சிரித்தார்.

கிரகித்தல் சோதனை :—

1. கந்தனுக்குப் படிக்கத் தெரியுமா?
2. அவன் எதற்காகக் கண்ணாடி வாங்க ஆசைப்பட்டான்?
3. கந்தன் அளித்த விடையைக் கேட்டுக் கடைக்காரர் ஏன் சிரித்தார்?
4. பூர்த்திசெய்—

(அ) "மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டால் நானும் ——————" என்று கந்தன் நினைத்தான்.

(ஆ) பற்பல கண்ணாடிகளைப் போட்டுப் பார்த்தும் கந்தனால் ——————.

(இ) "கண்ணாடி இல்லாமல் படிக்கத் தெரிந்தால் நான் ஏன் —————— ——————" என்றான் கந்தன்.

5. சரியா, தப்பா—

சரி என்றால் √ என்றும் தப்பு என்றால் × என்றும் குறி இடு.

(அ) மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டால் எல்லாரும் படிக்க முடியும்.

(ஆ) கந்தனுக்குப் படிக்கவே தெரியாது என்று கடைக்காரர் தெரிந்து கொண்டார்.

செய்தித் திரட்டு

(1) திருவெண்ணெய்நல்லூர்.

22-1-55ல், உபாத்திமைச் சங்கம், ஸ்ரீ K. பத்மநாதன் தலைமையில் கூடிற்று. 4, 5 வகுப்புக்களுக்கு எண் வேலையைப்பற்றி ஸ்ரீ N. கோவிந்தசாமியும், தையல் வேலையும் உடுப்பு தயாரிப்பதும் என்பதுபற்றி ஸ்ரீமதி D. ரஞ்சித அம்மாளும், அஹிம்சை என்ற குறள் அதிகாரம்பற்றி ஸ்ரீ K. வெங்கடேசனும் பேசினார்கள். உதவி கண்காணிப்பாளர் ஸ்ரீ S. R. தியோடர் அவர்களுக்குப் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது.

12-2-55ல், நடந்த கூட்டத்தில் 'பிள்ளைகளைச் சேர்த்தலும் ஆசிரியர் கடமையும்' என்பதுபற்றி ஸ்ரீ K. ஸ்ரீனிவாஸாச்சாரியாரும், 'காலம் அறிதல்' என்ற குறள் அதிகாரம்பற்றி நாராயண அய்யங்காரும் பேசினார்கள்.

14-2-55ல் 'சிறு சேமிப்புப் பட்சம்' கடைசி தினம் கொண்டாடப்பட்டது. சிறு சேமிப்பின் அவசியத்தைப்பற்றி ஸ்ரீ S. பட்டாபிராமனால் விளக்கப்பட்டது. சிறுவர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

(2) கிடாரக்குளம்.

15-2-55ல் கிடாரக்குளம் உயர்தர ஆரம்பப் பாடசாலை மாணவர் செந்தமிழ்க் கழகத்தின் சார்பில் நெல்லை மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவரான திரு. கு. இராமசுப்பு ரெட்டியார் அவர்கட்கு ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. தலைவர் அவர்களையும் மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட நாட்டாண்மைக் கழக உறுப்பினர்களையும் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. M. G. ஜான் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பேச்சுப் போட்டி, ஆடல் பாடல் இவற்றால் மாணவ மாணவிகள் எல்லோரையும் மகிழ்வித்தனர். பாடசாலையின் அதிபர் திரு K. A. நமசிவாய முதலியார் அவர்கள் ஆசியுரை கூறினார்கள்.

தலைவரவர்கள் தம் முடிவுரையில் பள்ளி வளர்ச்சி குறித்தும் அதன் நடைமுறை குறித்தும் பாராட்டிப் பேசியதுடன் தமக்கு அளித்த கௌரவத்திற்கு தக்க முறையில் நன்றி தெரிவித்துக் கொண்

(3) செங்கற்பட்டு.

24-2-55ல் செங்கற்பட்டு, கவர்ன்மெண்ட் லேடி வில்லிங்டன் சானிடோரியம் ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் மைலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த சுவாமிஜி பரமாத்மானந்தா அவர்கள் விஜயம் செய்து தலைமைவகித்து விழாவைச் சிறப்பித்தது மகிழ்ச்சிக்குரியதாகும். முதலில், பாடசாலையின் சார்பாக, வார்டன் ஸ்ரீ அம்பலவாண பக்தர் அவர்கள், சுவாமிஜி அவர்களுக்கு மலர்மாலை சூட்டி வணக்கம் தெரிவித்து வரவேற்றார்.

பின்னர் பாடசாலையிலுள்ள மாணவர்களால் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட அலங்கார மண்டபத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண குருதேவர், அன்னை ஸ்ரீ சாரதாமணிதேவி, இவர்களது திரு உருவப் படங்களை நறுமண மலர்களாலும், மின்சார ஒளி தீபங்களாலும் அழகுறச் செய்து, தூப, தீப நைவேத்யங்களுடன் பூஜித்து, மாணவர்களால் ஸ்தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டு வந்தனை வழிபாடுகள் நடைபெற்றன. விஜயம் செய்த சுவாமிஜி அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணரது சரிதத்திலிருந்து சில விசேஷப் பகுதிகளையும், குருதேவரது உபதேச மொழிகளைப் பற்றியும் மிக எளிய நடையில் சொற்பொழிவாற்றினார். எல்லோருக்கும் பிரசாதங்கள் வழங்கியபின், தலைமை ஆசிரியர் ஸ்ரீ T. K. ராமஸ்வாமி அய்யர் அவர்களால் தலைவர் சுவாமிஜி அவர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு விழா இனிது முடிந்தது.

(4) திண்டிவனம்

குஷால்சந்த் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 30 பேர் பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ S. சுப்ரமணிய அய்யர் அவர்களின் தலைமையில் சென்னைக்குச் சுற்றுப்பிரயாணம் சென்று வந்தனர். 26-2-55ல் ரயில் சலுகைக் கட்டணத்தில் புறப்பட்டு சென்னையில், காங்கிரஸ் பொருட்காக்ஷி, உயிர், உயிரில்லாப் பொருட்காக்ஷி சாலைகள், புஷ்பக் கண்காக்ஷி, கப்பல் துறைமுகம், கலங்கரை விளக்கம் முதலியவைகளைக் கண்டுகளித்து 28-2-55ல் மீண்டனர்.

இடவசதியளித்தும் 27-2-55ல் காலை சிற்றுண்டியும் பகல் உணவும் இலவசமாக அளித்தும் ஆதரித்த மாம்பலம் ஜைன மாணவர் இல்ல நிர்வாகத்தினர்க்கும் சலுகைக் கட்டண வசதியளித்த ரயில்வே அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டது.

(5) குடியரசு தின விழா.

26-1-55ல் கீழ்க்கண்ட பாடசாலைகளில் குடியரசு தின விழா விமரிசையாக கொண்டாடப்பட்டது :—

1. எலிமெண்டரி பாடசாலை, திருவெண்ணெய் நல்லூர்.

2. பஞ்சாயத்துப் பாடசாலை, ஏரையூர்.

3. குஷால்சந்த் பாடசாலை, திண்டிவனம்.

4. போர்டு ஆரம்பப்பள்ளி, பெரம்பலூர் மேற்கு.

5. ஆர். எம். ராமசாமி செட்டியார் பாடசாலை, நடராஜபுரம்.

6. பிராஜெக்ட் பாடசாலை, மணிமுத்தார்.

7. சௌராஷ்டிர செக்கண்டரி பாடசாலை, மதுரை.

(6) திருச்சி.

13-2-55ல் திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்கள் யூனியன் செயற் கமிட்டிக் கூட்டம் திருச்சி ஆசிரியர்கள் கில்டு கட்டிடத்தில் யூனியன் தலைவர் அவர்கள் தலைமையில் கூடிற்று. பொதுக்காரியதரிசி அவர்களால் சென்ற கூட்ட நடிவடிக்கையும், 1-1-55ம் தேதிய பேட்டிகளின் சாராம்சங்களும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

புதிதாகப் பதவியேற்றுள்ள திருச்சி ஜில்லா கலெக்டர் உயர்திரு. R. S. மலையப்பன், I. A. S. அவர்களை யூனியன் சார்பில் பேட்டிக் காண்பதென்றும், மற்றும் முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

(1) பேட்டி :—13-2-55ல் இந்த யூனியன் சார்பில் ஜில்லா நல அதிகாரி உயர் திரு. G. ஸ்டீபன், M. A., அவர்களைப் பேட்டி கண்டது.

நல அதிகாரி அவர்கள் "பொய் ஆஜர் பதிவு (False attendance) இடக்கூடாதென்றும், இப்படி செய்தால் மதிய உணவு ரிஜிஸ்தரிலும் பொய் பதிவு செய்ய நேரும் என்றும், இதனால் மதிய உணவு பணம் விரயம் ஆகிறதென்றும், காஷுவல் லீவை தகுந்த முறைப்படி நல்முறையில் உபயோகிக்கவேண்டும் என்றும், இம்மூன்று விஷயங்களிலும் ஆசிரியர்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும், இவற்றை யூனியன் சார்பில் எல்லா ஆசிரியர்களுக்கும் அறிவித்துவிட வேண்டும்" என்றும் கூறினார்கள். அறிவிப்பதாக பொதுக்காரியதரிசி அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

(2) பேட்டி :—14-2-55ல் மாஜி சென்னை ராஜ்ய ஹரிஜன் நல டைரக்டரும், தற்போது திருச்சி ஜில்லா கலெக்டருமான உயர்திரு. R. S. மலையப்பன், I.A.S. அவர்களை யூனியன் சார்பில் பேட்டிக் கண்டு, 12 விண்ணப்பக் கோரிக்கைகள் எழுதி சமர்ப்பிக்கப்பட்டன. பொதுக் காரியதரிசி அவர்களால் "இவற்றின் மீதும் பொதுக்கூட்டத்திய 1, 4, 6, 8 தீர்மானங்களின்மீதும், மகாநாட்டு 27 தீர்மானங்களிலும் தக்க நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்யும்படி" கேட்டுக் கொள்ளப்பட்டது. இவை சம்பந்தமாக கலெக்டர் அவர்கள் சுமார் ஒரு மணிநேரம் அன்புரையாடல் செய்து "சகல குறைகளையும் களைந்து, நன்மை நல்குவதாக" கூறினார்கள். வணக்கம் செலுத்தி விடை பெற்று வரப்பட்டது.

அறிவிப்பு :—

நமது யூனியன் சார்பில் சென்னை முதலமைச்சர் முதலாகப் பல அதிகாரிகளை, நமது மகாநாட்டின் 27 தீர்மானங்கள் விஷயமாகவும், நமது குறைகள், தேவைகள் விஷயமாகவும் விரைவில் தூது கோஷ்டியின் மூலம் பேட்டிகாணவேண்டி இருக்கிறபடியால், பேட்டியின்போது என்னென்ன கோரிக்கைகள் கேட்கப்பட வேண்டும் என்பதைக் குறித்து, பொதுக் காரியதரிசி அவர்களுக்கு முன்கூட்டியே, ஒவ்வொரு ஆசிரியரும் எழுத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளலாம். இத்துடன் சந்தாவும், இது விஷயமாக நன்கொடையளிப்பவர்கள் நன்கொடையும் M.O. மூலம் அனுப்பின், புக்போஸ்டில் உரிய ரசீது வழங்கப்படும். பாக்கியுள்ளவர்கள் காலதாமதமின்றி, உடனடியாக அனுப்புவது நலம்.

பி. எஸ். அந்தோனிசாமி.

பத்திராதிபர் குறிப்புக்கள்

ஆசிரியர்களின் நிலைமை

ஆசிரியர்களின் பொருளாதார நிலைமையைப் பற்றிப் பல முறை நாம் எழுதியிருக்கிறோம். அவர்களுடைய நிலைமை உயரவேண்டும் என்று சொல்லாதவர் இல்லை. ஆனால் அரசாங்கத்தில் உள்ள நிதி நெருக்கடி காரணமாக ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. இதை நாம் உண்மை என்று ஒப்புக்கொண்டாலும், ஆசிரியர்களின் குறைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டியது அரசாங்கத்தின் முதல் கடமை என்றும், அந்த விஷயத்தில் அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படாது என்றும் நம்புகிறோம். அகவிலை உயர்ந்துள்ள இக்காலத்தில் வாழ்க்கையில் அல்லல்படும் ஆசிரியர்கள் தமது கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் கடமைகளைச் செய்து வருவதைப் பாராட்டத்தான் வேண்டியிருக்கிறது.

எவ்வளவு காலம் ஆசிரியர்களின் பொறுமையைச் சோதிக்க முடியும்! சென்ற பத்து ஆண்டுகளாக அவர்கள் வாழ்க்கைக்கு இன்றியமையா உணவு, உடைகளைக்கூட தேவையான அளவு பெறமுடியாத நிலைமையில் இருந்து வருகின்றனர். தொழிலாளர்களுடைய முறைகளைப் பின்பற்றி, கிளர்ச்சிகளைச் செய்யவும் மனமின்றி, நல்ல காலம் வரும் என்று காத்துக்கிடக்கின்றனர். அவர்களுடைய அதிருப்தியையும், கஷ்ட நிலைமையையும் சாதகமாக்கிக்கொண்டு, ஆசியர்களைத் தூண்டிவிடுவதற்கும் சிலர் இல்லாமல் போகவில்லை. இந்த நிலைமையில் ஆசிரியர்கள், எல்லா நியாயமான முறைகளிலும் அரசாங்கத்தாருக்குத் தம் குறைகளைத் தெரிவித்து வருகின்றனர்.

தேசபக்தி, சட்டப்படி நடப்பது அவசியம் என்ற மனப்பான்மை, முதலியவைகளில் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்து மனக்கசப்புடன் வாழ்வது சமூகத்திற்கு நல்லதா? அல்லது அரசாங்கத்திற்கு நல்லதா? என்பது சிந்திக்க வேண்டிய விஷயமே.

ஆசிரியர்கள் கேட்பதுதான் என்ன? கூலிவேலை செய்பவர்களும், தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களும் பெறுவதைவிடக் குறைந்த வருமானத்தில் நாம் வாழ்க்கையை நடத்த முடியவில்லையே என்றுதான் சொல்லுகிறார்கள். சம்பளத்தில் சிறிது உயர்வு கேட்கிறார்கள்.

மேலும் பிராவிடென்ட் பண்டுக்கும், பென்ஷனுக்கும் ஒரு திட்டமிட்டு ஆசிரியர்களின் முதுமைப் பருவத்தில் பொருளுதவி கிடைக்குமாறு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

வேலையிலிருந்து விலகுமுன் இறந்துவிடும் ஆசிரியர்களின் குடும்பப் பாதுகாப்புக்காக இன்ஷுரன்ஸ் திட்டம் தேவை என்று சொல்லுகிறார்கள்.

நோயுற்றபோது வைத்திய உதவி கிடைப்பதற்கும் வசதி செய்து தரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர்.

ஸ்தல ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வைத்திய உதவி கிடைக்க வழியிருக்கிறது. எல்லா ஆசிரியர்களுக்கும் இவ்வித உதவி கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் வழி செய்ய வேண்டியது அவசியம். இவற்றிற்காகச் செலவாகும் பணம் முழு பலனைக் கொடுக்கும் என்பது உண்மை. சமூக நல திட்டத்திற்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ கோடி ரூபாய்கள் செலவழிக்கப் போகிறார்கள். அப்பெருந் தொகை சரியான பலனைத் தரவேண்டும் என்றால், கல்வி முன்னேற்றமே அடிப்படையாக அமையவேண்டும்; அக்கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களே அஸ்திவாரமாக இருக்கத் தகுந்தவர். குறை

களைச் சொல்லி மனக்கசப்புடன் வேலை செய்யாமல் ஆசிரியர்கள் முழுமனதுடன் வேலைசெய்ய ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். ஆகவே ஆசிரியர்களின் குறைகளை நீக்கி, அவர்கள், எதிர் காலத்தில் பிரஜைகளாக இருப்போரை நல்ல முறையில் பயிற்சி செய்ய அரசாங்கம் உதவி செய்யும் என்று நம்புகிறோம்.

வரவேற்கின்றோம்

சட்ட சபையில் பட்ஜட் சமர்ப்பித்த போது கனம் நிதி மந்திரியவர்கள் மாணவர்களுக்குச் சம்பளச் சலுகை அளிக்கும் திட்டத்தை வெளியிட்டார். மாதம் ரூ 100க்கு குறைந்த வருமானமுள்ளவர்களுடைய பிள்ளைகளும் பெண்களும் 8ம் வகுப்பு வரையில் சம்பளம் இன்றி கல்வி பெறுவதற்கு வழி செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி எல்லோருக்கும் கல்வி பெறும் உரிமை உண்டு. வறுமையால் அவதிப்படும் குடும்பங்களில், சம்பளம் கொடுத்துக் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வசதி இருப்பதில்லை. ஆகையால் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு இந்த சம்பளச் சலுகை அளித்து வந்தார்கள். இனி இச்சலுகை எல்லோருக்கும் அளிக்கப்படும். இந்த முக்கியமான சலுகையைக் காட்டியதற்காக அரசாங்கத்திற்கு நமது நன்றி.

Regd. No. M. 3473

THE

S. I. T. U. PROTECTION FUND LTD.

520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5

(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)

Total Assets Exceed 14,00,000

No. of Policies over 5000

THIS is an Insurance Company of the TEACHERS. Benefits go only to the TEACHERS. Hence as you are a TEACHER you should join this TEACHERS' MUTUAL SOCIETY.

Have you looked into our New Tables WITH the revised rates of premiums?

The rates are to your advantage.

There are SEVEN TABLES for periods of 10, 15, 20, 25 and 30 years.

All Grades of teachers up to the age of 45 can now become members. Benefits range from 250 to 900 to start with and go on increasing as years pass by and each unit on maturity will get you from Rs. 400 to 1440 according to the tables, besides bonus benefits.

This is the cheapest Insurance Company in the field.

For particulars apply to:

S. D. KRISHNAMURTI RAO,
Secretary.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan, for "The South India Teachers' Union," at 520, High Road, Triplicane, Madras-5.